பக்கங்கள்: பத்து

Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2029 மார்கழி 21 செவ்வாய்க்கிழமை (05-01-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 34

05 JAN 1999

# தமது கப்பலிலேயே பொருள்களை யாழ். அனுப்ப வர்த்தகர்கள் முடிவு

## கொழும்பில் ஒன்று கூடித் தீர்மானம்

கொழும்பு, ஜனவரி 5

தாம் வாடகைக்கு அமர்த்தும் கப்பல்களில் மட்டுமே பொருள்களை கொழும்பில் இருந்து வடக்கே அனுப்புவது என யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை அனுப்பும் வர்த்தகர்கள் கொழும்பில் கூடி முடிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்குப் பொருள்களை கப்பலில் ஏற்றும் வணிகர்கள் கடந்த 30 ஆம் திகதி கொழும்பு கதிரேசன் வீதி முருகன் மண்டபத்தில் கூடி இவ்வாறு தீர்மானம் எடுத்திருக்கின்றார்கள்.

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து சங்கம் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ கொழும்பிலிருந்துசரக்குகளை ஏற்றி வரும் கப்பல்களை வாடகைக்கு அமர்த்தும் பொறுப்பு ஜனவரி முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணத்திற்குப் பொருள்களை கப்பலில் ஏற்றும் வணிகர் சங்கத்தினுடையதாக இருக்கும்.

★ அத்தகைய சரக்குக் கப்பலில் இட ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவினுடையதாக இருக்கும்.

★ சரக்குக்கான கட்டணங்களைச் சங்கமே தீர்மானிக்கும். அந்தக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் விடயத்தில் கப்பல் உரிமையாளர்களைத் தலையிட அனுமதிக்கப்படமாட்டாது.

தற்போது சரக்குக்கட்டணமாக ஒரு மெற்றிக் தொன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் படைக்கு புதிய ரஷ்ய ஹெலிகள்

கொழும்பு, ஜன. 5

விமானப்படைக்கு ரஷ்யத் தயாரிப்பான இரு 'எம். ஐ. 35' ரக ஹெலிகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கென விமானப்படை அதிகாரிகள்குழுஒன்று ரஷ்யா சென்றுள்ளது. இக்குழுவினர் அங்கு 'எம்.ஐ.35' ரக ஹெலிகளைப் பார்வையிட்டு அவை பற்றிய விவரங்களை அறிவர்—

முதற்கட்டமாக மறுசீரமைக்கப்பட்ட இரு ஹெலிகளை கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

( 10ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்நூறு பயணிகளை லங்கா முடித்த ஏற்றிவரும்?

யாழ்ப்பாணம், ஜன. 5

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடன் யாழ். வரவுள்ள 'லங்கா முடித்த' கப்பல் வரும் வழியில் திருமலை சென்று சுமார் 500 பயணிகளையும் ஏற்றிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். செயலகத்திற்குரிய உணவுப் பொருள்களை ஏற்றிய நிலையில் எந்நேரமும் வடக்கே புறப்படத் தயாரான நிலையில் இக்கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி வடக்கே விஜயம்

கொழும்பு, ஜன.5

புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய கடந்த வாரம் வடபகுதிக்கு விஜயம் செய்தார்.

புத்தாண்டில் அவர் மேற்கொண்ட இந்த முதல் விஜயத்தின்போது படையினரின் நலன்கள், யுத்த நெறிமுறைகளைப் பின்பற்றுதல் குறித்தும் மற்றும் படையினரின் இடமாற்றம், பதவி உயர்வு என்பன பற்றியும் சிரேஷ்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## வீதியில் சென்றவர் மீது இனந்தெரியாதோர் சூடு!

### இராசபாதையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 5

கோப்பாய்ப் பகுதியில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டினால் காமயடைந்த குடும்பஸ்தர் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

கோப்பாயைச் சேர்ந்த பிலிப்பையா பற்றிக்நிக்ஷன் (வயது 28) என்பவரே துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாலரை கிலோ ஹெரோயின் சிக்கியது!

கொழும்பு, ஜன. 5

திருவனந்தபுரத்திலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்த பயணி ஒருவரிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான நாலரை கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவரது பயணப் பையின் அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தப் போதைப் பொருள் சோதனையின் போது சுங்க அதிகாரிகளின் கைகளில் சிக்கியது.

ஜப்பான் கடவுச் சீட்டு வைத்திருந்த இந்த நபர் ஆப்கானிஸ்தான் நாட்டைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரின் சூட்டுக்கு மட்டக்களப்பில் ஒருவர் பலி

கொழும்பு, ஜன. 5

ஆஸ்மா நோயாளியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதற்காக நேற்றிரவு மாட்டு வண்டியைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் உயிரிழந்தார். ஒருவர் காயமடைந்தார்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு—வாழைச்சேனை வீதியில் ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த நல்லதம்பி சபாரட்ணம் (வயது 42) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார். அவருடன் இருந்த இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

(10 ஆம் பச்கம் பார்க்க)

## மட்டு - கொழும்பு வீதியில் வெள்ளம்

### போக்குவரத்து துண்டிப்பு

மட்டக்களப்பு. ஜன. 5

கிழக்கில் தொடர்ந்து பெய்து வரும் மழையை அடுத்து ஏற்பட்டுள்ளவெள்ள நிலைமை காரணமாக மட்டக்களப்புக்கும் ஏனைய இடங்களுக்குமான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது.

மகாவலி கங்கை பெருக்கெடுத்து ஓடுவதை அடுத்து மட்டக்களப்பு — கொழும்பு பிரதான வீதியில் மன்னாம்பிட்டி என்ற இடத்தில் வீதியின் மேலால் 6 அடி உயரத்திற்கு வெள்ளம் பாய்ந்த வண்ணம் உள்ளது. இதன் காரணமாக வீதியின் இரு புறமும் 300க்கும் மேற்பட்ட வாகனங்கள் தொடர்ந்து பயணம் செய்ய முடியாமல் தரித்து நிற்கின்றன.

வெள்ள நிலைமை காரண

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு நேற்று முதல் மீண்டும் உணவு லொறி

வன்னிப் பகுதியில் தொடர்ந்து பெய்து வந்த கடும் மழை காரணமாக கடந்த 28 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்த இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனத் தொடரணிச் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக மா ஏற்றிய 15 லொறிகள் நேற்று வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு சென்றன, தொடர்ந்து இன்று 15 லொறிகளும் நாளை 28 லொறிகளும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குப் பொருள்களுடன் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது

இதேவேளை—

வன்னிப் பகுதியில் தொடர்ந்து பெய்து வந்த பலத்த மழை கடந்த இரு தினங்களாகத் தணிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-164)

## வன்னி மாணவர் கல்விக்கு நிதி சேகரிப்பு முயற்சி!

### பல்கலை. மாணவர் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜன. 5

வன்னியில் இடம்பெயர்ந்து சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் தமது கல்வியைப் பயின்றுவரும் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வழங்குவதற்காக நிதி சேகரிப்பு இயக்கம் ஒன்றை யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளில் இவ்வாரம் முழுவதும் ஈடுபடுவதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

நிதி சேகரிப்பு நடவடிக்கைக்காக பல்கலை.மாணவர்கள் பங்கேற்கும் 'இந்திரப்பிரஸ்தம்' என்ற நாடகத்தை எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இவ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மழையால் பங்கர்களில் வெள்ளம்; படையினர் பாதிப்பு!

வவுனியா, ஜன. 5

வன்னிப் பகுதியில் பெய்து வரும் கடும் மழை காரணமாக 'வெற்றி உறுதி' நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் நோய்த் தொற்றுக்குள்ளாகி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக வவுனியாவுக்குக் கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் மலேரியா மற்றும் வேறு பல தொற்று நோய்கள் காரணமாக அனுராதபுரம் வைத்தியசாலையிலும் வேறு ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சை பெற்று வருவதாகவும்—

மழை காரணமாக நிலத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தம்பி நாகமுத்து நாகலெட்சுமி

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பி நாகமுத்து நாகலெட்சுமி அவர்கள் 03-01-99 ஞாயிற்றுக்கிழமை அன்று நயினாதீவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05-01-99 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நயினாதீவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மா. செந்தில்குமரன்
(பேரன்)

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு (61933)

## திருமதி லூசியா பிரான்சிஸ்

சுண்டுக்குளி றக்கா ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி லூசியா பிரான்சிஸ் 04-01-99 இல் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் ஜேம்ஸ் பிரான்சிஸ்சின் அன்பு மனைவியும் மாலினி, மகேந்திரன், மகேஸ்வரி, மனோ ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆனந்தராஜா, ராஜலிங்கத்தின் அன்பு மாமியாரும் அந்தோனிப்பிள்ளை, காலஞ் சென்ற சிசிலியாவின் அன்புச் சகோதரியும் மக்ஸி, தர்மினி, மாக்கஸ், பிருந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05-01-99) பிற்பகல் 3.00 மணியளவில் திரேசம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்துக் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜே. பிரான்சிஸ்

10, றக்கா ஒழுங்கை,
சுண்டுக்குளி. (61935)

## கந்தையா நடராசா

கொக்குவில் மணியகாரன் ஒழுங்கையைச் சேர்ந்த கந்தையா நடராசா (இளைப்பாறிய இலிகிதர்) 4-1-99 அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா திலகவதி தம்பதிகளின் அன்பு மகனும், இந்திராதேவி அவர்களின் அன்புக் கணவரும், அல்வாயைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசபை (விதானையார்) தம்பதிகளின் அன்பு மருமகனும், வாசுகி (ஜேர்மனி), தமயந்தி (ஜேர்மனி), நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசுந்தரம் (ஜேர்மனி), கலாநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுலன், பிரியங்கா (ஜேர்மனி) ஆகியோரின் அருமைப் பேரனும், சிவபாக்கியம், தையல்நாயகி, பராசக்தி, ராஜேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விசுவநாதர், விநாயகமூர்த்தி, கங்காதரன், சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சௌந்தலாம்பிகை (கனடா), காலஞ்சென்ற ணிகாசலம்பிள்ளை, திருமதி மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கதிர்காமத்தம்பி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (5-1-99) இன்று நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ந. நந்தகுமார்
(மகன்)

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில். (61934)

## திருமதி கந்தையா செல்லம்மா

சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா செல்லம்மா 04.01.99 திங்களன்று காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற சு. அமிர்தவல்லி, சி. இராஜசிங்கம் (ஓய்வுபெற்ற சுங்கத் திணைக்கள அதிகாரி), ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவதாசன் (சிங்கப்பூர்), சிவநேசன் (கொழும்பு), திருமதி ஏ. சிவஞானவதியார் (கொழும்பு), திருமதி ஜெ. சிவயோகவதியார் (இங்கிலாந்து), திருமதி இ. நீலாதேவி (கொழும்பு), திருமதி நா. சாந்திமணி (ஜேர்மனி), மனோகரன் (இங்கிலாந்து), வீமதேவன் ஆகியோரின் அன்புத்தாயாரும், இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி, சி. ஏரம்பமூர்த்தி, காலஞ்சென்ற இ. ஜெயராஜசிங்கம், வி. இராசரத்தினம், ச நாகராசா, பவானி, தேவநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும்ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04-01-99 அன்று சுழிபுரத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
சி. இராசசிங்கம்
(சகோதரன்)
க. வீமதேவன்
(மகன்)

வானம்பாடி
முகவர் நிலையம்,
பிரதான வீதி,
சுழிபுரம். (61921)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன 5

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகம் நடத்தும் தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மல்லாகம் சந்தியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும். (ஐ-6)

## உயர்தரப் பரீட்சை முடிவுகள் இம்மாதம் வெளியாகும்

கொழும்பு, ஜன. 5

கடந்த ஆண்டு ஓகஸ்டில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாத நடுப் பகுதியில் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 15 ஆம்திகதிக்கு முன்னர் பெறுபேறுகளை வெளியிட ஏற்பாடுகள் நடைபெறுவதாகப் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-10)


A/L 2001
MATHS
Mr. சிவலோகநாதன்
CHE. Mr. அன்பழகன்
PHY. Mr. ஸ்பெல்மன்
BIO. Mr. ஞானேந்திரன்
ஆரம்பம் 06—01—99
புதன் 3. 00 P.m
SHAMROCK
யா/ஈச்சமோட்டை வீதி.
(சி/6008)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
ரஜனியின்
நல்லவனுக்கு நல்லவன்
தினசரி;- 10.30, 2.30
(பழைய நேரம்)
T P. No. 070—212223
(61826)

ராஜா
யாழ்ப்பாணம்.
நெப்போலியன், நாசா
தேவயானி, மணிவண்ணன்
நடித்த
கிழக்கும் மேற்கும்
முதல் வாரம்
10-30, 2-00, 5-00
[சி/5958]

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அஜித், தேவயானி
நடித்த
காதல்கோட்டை
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10-30, 2-30
(61930)

ஸ்ரீ செல்வா
சினிமா
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தினசரி 10. 30, 2. 30
(பழைய நேரம்)
கார்த்திக் - கௌசல்யா
நடித்த
பூவேலி
(நேரடி-C. D)
(சி/6014)


## துறைமுகத்தில் மீண்டும் பொருள் இறக்கும் பணி

யாழ்ப்பாணம், ஜன. 5

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி மீண்டும் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடுமையான கடல்கொந்தளிப்பினால் கடந்த ஒரு வாரகாலமாகக் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும்பணி இடை நிறுத்தப்பட்டிருந்தது.

கொந்தளிப்பு தணிந்து கடலில் சீரான நிலை தென்பட்டதை அடுத்து மீண்டும் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-15-173)


ஐடியல் கல்வி நிலையம்
(நீர்வேலி)
A/L 2001
கலை, வர்த்தகம்
ஆரம்பம் 09 - 01 - 1999
சனிக்கிழமை மாலை 3.00 மணி
யாழ், வடமராட்சி முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
கணக்கீடு:- உங்கள் ஆசிரியர், நித்தி
பொருளியல்:- இராஜேஸ்வரன்
வணிகக்கல்வி:- முகுந்தன்
தமிழ்:- உங்கள் ஆசிரியர், காந்தன்
இந்துநாகரிகம் / இந்துசமயம் சிறீஸ்
அளவையியல்:- மோகன்
புவியியல்:- கிரிதரன்
A/L 1999, 2000 பிரிவுகளும் O/L வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
A/L 1999 Paper Classes ஆரம்பமாகிவிட்டன.
(சி/6010)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியை
திருமதி யேசுராசா மேரி அஞ்சலா
அவர்களின் அன்புக் கணவர்

**யோசை யேசுராசா**
(ராசா)

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
யா/நாரந்தனை றோ.க. மகாவித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.
(61931)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்
திரு. அ. பிலிப் அன்ரனி
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி செபமாலையம்மா அல்பிறட்**
(முன்னாள் ஆசிரியை, கிளாலி றோ. க. த. க. பா)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
கிளி/வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலை
(61936)

## மரண அறிவித்தல்

### பத்திநாதர் மகிமைநாதன்

குருநகரைத் தமது வசிப்பிடமாகக் கொண்டவரும் அருணா இசைக்குழுவின் கிற்றார் வாத்தியக் கலைஞரும், பாடகருமான பத்திநாதர் மகிமைநாதன் 4-1-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரது பூதவுடல் 5-1-99 இன்று பி.ப. 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

28, A, கடற்கரை வீதி,
குருநகர். (61925)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 ஷியா முஸ்லிம்கள் பாகிஸ்தானில் சூட்டுக்குபலி

## சுனி முஸ்லிம்கள் கைவரிசை

இஸ்லாமாபாத், ஜன. 5
பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள பள்ளி வாசல் ஒன்றின் மீது இனந் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குறைந்தது 14 ஷியா முஸ்லிமகள் கொல்லப் பட்டனர்.

ஷியா முஸ்லிம்களின் பள்ளி வாசலுக்கு காரில் வந்து இவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

பெரும்பான்மை சுனி மற்றும் சிறுபான்மை ஷியா முஸ்லிம்களின் போட்டித் தீவிரவாதக் குழுக்களிடையே இடம்பெறும் பழிக்குப் பழி வாங்கும் தொடர் கொலைகளில் இதுவும் ஒன்று என்று பொலீஸார் கூறுகிறார்கள்.

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப்பைக் கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்ட ஒரு தினத்தின் பின்பு இந்தச் சம்பவம் இடம் பெற்ற போதிலும் இரு சம்பவங்களுக்கும் இடையில் தொடர்பு இருக்கும் சாத்தியம் கிடையாது என்று தெரிவிக்கப்படுகிறது.

நவாஸ் ஷெரீப்பை கொலை செய்ய அவர் பயணம் செய்யவிருந்த பாதையில் குண்டு ஒன்று வைக்சப்பட்டிருந்தது. எனினும் நவாஸ் ஷெரீப் தாமதமாகி வந்ததால் அந்தக் குண்டு அவர் வருவதற்கு முன்னதாகவே குறிப்பிட்ட நேரத்தில் வெடித்து விட்டது.

(இ-8)

# ஷெரீப்பயணம்செய்யவிருந்த பாலத்தில் குண்டு வெடித்தது!

## மயிரிழையில் உயிர் தப்பினார்

பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ்ஷெரீப் பயணம் செய்யத் தீர்மானித்திருந்த பாலமொன்றில் பொருத்தப்பட்டிருந்தகுண்டொன்றுவெடித்ததில்மூவர் கொல்லப்பட்டதுடன் பொலீஸ் அதிகாரி ஒருவர்காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிரதமரின் சொந்த ஊரான லாகூரில் இடம் பெற்றது.

நவாஸ் ஷெரீப் லாகூரில் நடந்த கூட்டமொன்றில் கலந்து கொண்ட பின்னர் தாமதமாகத்திரும்பியதனால் இக் குண்டுவெடிப்பிலிருந்து உயிர் தப்பினார்.

பாலத்தின் மீது சென்று கொண்டிருந்த பொதுமக்கள் மூவர் குண்டுவெடிப்பினால் கொல்லப்பட்டதுடன், பிரதமரின் பிரயாணப் பாதையை சரிபார்க்கச் சென்ற பொலீஸ் அதிகாரியொருவர் காயமடைந்தார்.

குண்டுவெடிப்புத் தொடர்பான விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-8-10)

# கடற்படை தளபதி நீக்கம்; புலிகள் காரணமா?

## சுவாமி குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜன. 5
இந்தியாவின் பிரதம கடற்படைத் தளபதியாகவிருந்த அட்மிரல் விஷ்ணு பகவத்தை இந்திய அரசாங்கம் பதவி நீக்கம் செய்ததுக்கு விடுதலைப் புலிகளின் நெருக்குதலே காரணம். இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி இந்திய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

அந்தமான் தீவுக்கு ஆயுதங்களைக் கடத்தி வந்து விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே இருந்து வந்த தொடர்புகள் குறித்து அறிந்து அதனை முறியடிப்பதற்காக கடற்படைத்தளபதி கடுமையான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என்றும்—

**உலக அரங்கில்**

இதனையடுத்து கடற்படைத் தளபதியை பதவி நீக்குமாறு இந்தியபாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டசுக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து நெருக்குதல் வந்திருக்கலாம் என்றும்— சுப்பிரமணிய சுவாமி கேட்டுக்கொண்டார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் முன்னிலையில் கடற்படைத் தளபதியின் பதவி நீக்கம் தொடர்பான விசாரணை இடம்பெற வேண்டும் என்றும் சுப்பிரமணியம் சுவாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னைக்கடலில் வைத்து விடுதலைப் புலிகளின் ''எம். வி. அகத்'' கப்பலை வழிமறித்து விடுதலைப் புலிகளின் 2ஆவது தலைவராக இருந்த கிட்டு அல்லது கிருஷ்ணகுமாரை கைது செய்வதற்கான முக்கிய பணியை விஷ்ணுபகவத் மேற்கொண்டதாகவும் சுப்பிரமணியம் சுவாமி சுட்டிக் காட்டி உள்ளார்.

அதேசமயம் எந்தவிதமான முன்னறிவித்தலும் கொடுக்கப்படாமல் —

தனது நியாயத்தை அட்மிரல் பகவத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் — பதவி நீக்கம் இடம் பெற்றுள்ளதாக அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விஷ்ணுபகவத் தேசிய பாதுகாப்புக்குக் குந்தமாக இருந்தார் என்பது குறித்த காரணங்களை வாஜ்பாய் அறிவிக்க வேண்டும் என்றும் ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இதேவேளை— விஷ்ணு பகவத்தை பதவி நீக்குவதற்கு முன் எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடப்பட்ட தென்றபிரதமரின் தலைமைச் செயலாளர் பிராதேஷ் மிஸ்ராவின் கூற்றில் எந்தவிதமான உண்மையுமில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சரத்பவார் தெரிவித்தார். (இ-8-10)

# அரசுடன் 6 நாள் பேச்சின் பின்னர் கெமர்ரூஜ் தலைவர்கள் இருவரும் ஹெலியில் திரும்பிச் சென்றனர்

நொம்பென், ஜன. 5
கம்போடிய அரசாங்கத்திடம் சரணடைந்த கெமர்ரூஜ் இயக்கத்தின் முன்னாள் தலைவர்களான கியூசாம்வான், நொவாங்சியா ஆகிய இருவரும் அரசுடன் நடத்திய 6 நாள் பேச்சுவார்த்தையின் பின்னர் ஹெலிக்கொப்டர் மூலம் பவின் நகரம் சென்று விட்டனர்.

இருவருக்கும் கம்போடிய அரசு விசேட பிரமுகர்களின் அந்தஸ்துடன், அரசமரியாதையும் வழங்கியதற்கு மனித உரிமைக் குழுக்கள் ஆட்சேபம் தெரிவித்து கெமர்ரூஜ் இயக்க ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் சம்பந்தமாக விசாரணை நடத்த வேண்டும் என்று கோரியுள்ளன.

விசாரணைகளால் கம்போடிய அரசுக்கு எதுவித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை என்றும்—

கடந்த காலத்தை மறந்து சமாதானத்துடன் வாழும் புதிய எதிர்காலத்தைக் காண முயலவேண்டும் என்றும்—

கம்போடியப் பிரதமர் ஹுன்சென் தெரிவித்தார்.

அரசுடன் 6 நாள்கள் தங்கியிருந்த தலைவர்கள் இருவரும் மறுபடியும் முன்னைய கெமர்ரூஜ் தளத்துச்குச் சென்று விட்டதாகத் தெரிய வருகிறது.

தலைவர்கள் இருவர் மீதும் பிடிவிறாந்து பிறப்பிக்கப்படாததால் அவர்கள் இருவரும் எங்கு செல்வதற்கும் உரித்துடையவர்கள் என்றும் அவர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படும் வரை அவர்கள் குற்றவாளிகள் அல்லர் என்றும் அரச பேச்சாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை—

கெமர்ரூஜ் இயக்கத்தலைவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்படும் போது சர்வதேச நீதிமன்றத்தில் தாமாகவே ஆஜராவதற்கு அவர்கள் தயாராக இருப்பதாக கம்போடிய மன்னர் நொறாடொம் சிஹானூக் தெரிவித்துள்ளார்.

(இ-8-10)

# விஷஊசி ஏற்றி மரணதண்டனை

மணிலா, ஜன. 5
பதினொரு வயதான தனது வளர்ப்பு மகளைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய ஒருவர் நேற்று விஷ ஊசி ஏற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இச் சம்பவம் பிலிப்பீன்ஸில் இடம் பெற்றது.

''லியோ எச்சிக்கிறாய்'' என்ற நபரே இவ்வாறு விஷ ஊசி ஏற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்டவராவார்.

பிலிப்பீன்ஸில் கடந்த 22 வருடங்களாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரண தண்டனை வழங்கும் முறை மீண்டும் நேற்று முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

(இ-7)

# காங்கிரஸில் பெரும் மாற்றங்கள்; சோனியாகாந்தி நடவடிக்கை

புதுடில்லி, ஜன. 5
இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகப் பதவிகளில் பாரிய மாற்றங்களை சோனியாகாந்தி மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் தலித் இனத்தவர்களுக்கு கட்சியில் அதிகம் இடமளிப்பதே சோனியா காந்தியின் முக்கிய நோக்கம் என்று காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

காங்கிரஸ் கட்சி அரசியற் குழுவிலும் பாரிய மாற்றங்கள் செய்ய சோனியாகாந்தி திட்டமிட்டுள்ளதால் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சீதாராம் கேசரியால் கட்சியின் முக்கிய பதவிகளில் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மாற்றப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியில் பெண்களுக்கு 33 சதவீதத்தையும், சிறுபான்மையினருக்கு 20 சதவீதத்தையும், ஒதுக்கவும் சோனியாகாந்தி திட்டமிட்டுள்ளார்.

கட்சியில் இவ்வறான அதிரடி மாற்றங்கள் குறித்து காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுடனும். தலைவர்களுடனும் கலந்தாலோசித்த பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-8-10)

# ஈராக் கோரிக்கை

பக்தாத், ஜன. 5
ஈராக்கில் பணியாற்றும் ஐ. நா வைச் சேர்ந்த பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க அதிகாரிகளை திரும்ப அழைத்துக் கொள்ளுமாறு ஈராக் கேட்டுள்ளது.

அண்மையில் ஈராக் மீது நடத்தப்பட்ட அமெரிக்க பிரிட்டிஷ் வான் தாக்குதலை அடுத்து இவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை அளிக்க முடியாது என்று ஈராக் அறிவித்துள்ளது.

ஈராக்கில் 420 ஐ. நா அதிகாரிகள் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது.

(இ-ரி)

# சிறையில் நத்தார் கொண்டாடினார் லாலு

புதுடில்லி, ஜன. 5
கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் பட்னாவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள பீஹார் மாநில முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் கடந்த 25 ஆம் திகதி சிறையிலிருந்தபடியே மிகப் பெரிய அளவில் நத்தார் விழாவைக் கொண்டாடினார்.

நத்தார் தினத்தை முன்னிட்டு சிறைக் கைதிகளைத் தனது பாதுகாப்பில் சுற்றுலா ஒன்றுக்கு கூட்டிச்செல்வதற்கு அவர் அனுமதி கோரி இருந்தார்.

இது தொடர்பாக நீதிமன்றத்தில் அவரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது.

இதனை அடுத்தே சிறை மைதானத்தில் நத்தார் விழா கொண்டாடப்பட்டது.

நத்தார் தினத்தன்று பல்வேறு வகையான சிற்றுண்டிகள் கொண்டுவரப்பட்டதுடன் பிரபல இசைக்குழுவின் இசை நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்யப்பட்டது.

அன்றைய தினம் சிறைக் கைதிகள் அனைவரும் ஒன்று கூடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

பட்னாவினுள் பயூர் சிறையில் லாலு பிரசாத் யாதவ் தடுத்து வைக்கப்பட்டதையடுத்து சிறைச்சாலைச் சுவர்கள் வெள்ளையடிக்கப்பட்டதுடன், கடுமையான சட்ட திட்டங்கள் தளர்த்தப்பட்டு உணவின் தரமும் உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

(இ-8-10)

# அங்கோலாவில் மற்றொரு ஐ. நா. விமானம் சுடப்பட்டது

லுசாக்கா, ஜன. 5
அங்கோலாவில் கடந்த சனிக்கிழமையன்று இரண்டாவது ஐ. நா. விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

அங்கோலாவில் அரச படையினருக்கும், யுனிட்டா கிளர்ச்சியாளர்களுக்குமிடையிலான மோதல்கள் தொடருவதால் இதிலிருந்து தப்பும் முகமாக இவ்விமானத்தில் ஐ. நா. அதிகாரிகள் சென்ற வேளை யுனிட்டா கிளர்ச்சியாளர்கள் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாக ஐ நா. அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி விமானத்தில் 7 பயணிகள் இருந்ததாகவும் அங்கோலாவில் நடந்து [illegible] களுக்கு மட்டுமன்றி அங்கு கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் ஐ. நா. அதிகாரிகளுக்கும் அச்சுறுத்தலாக அமைவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இரண்டாவது ஐ. நா. விமானத்தையும் சுட்டு வீழ்த்திருப்பது தமக்கு அவமானத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும்—

அங்கோலா அரசும் யுனிட்டா கிளர்ச்சியாளர்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்குரிய சந்தர்ப்பம் இதுவே என்றும் — ஐ. நாவின் பொதுச் செயலாளர் கோபிஅனான் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை — சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்திலிருந்து தப்பியோரை யுனிட்டா கிளர்ச்சியாளர்கள் தம்வசம் வைத்துள்ளனர் என்ற அங்கோலா அரசின் குற்றச்சாட்டை யுனிட்டாகிளர்ச்சியாளர்கள் மறுத்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வல்லிபுரம் ரவீந்திரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை 02-01-99 அன்று கொக்குவிலுக்கும் யாழ். நாவலர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து முத்துக் கறுப்பன் பன்னீர் செல்வன் வைத்தீஸ்வரா சந்தி, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (61905)

பெறுமதி மிக்க கைச்செயின் ஒன்று கடந்த 03-01-99 அன்று கொக்குவில் கேசாவில் பிள்ளையார் கோவிலடி, மணியங்காடு கந்தசுவாமி கோவில், தாவடிப் பத்திரகாளி றோட் வழியாக சுதுமலை அம்மன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 24/1 சிவகுருநாதர் வீதி, நீராவியடி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (61908)

மட்டுவில் தெற்கு வேவிலையைச் சேர்ந்த நாகமுத்து தெய்வேந்திரம் ஆகியவரது 091029670 இலக்கமுடைய விசேட அடையாள அட்டை சாவகச்சேரி சந்தையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈசன் களஞ்சியத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/5997)

மேரி பிறிஜ்ஜற் ஏஞ்சலின் கனிசியஸ் என்பவருடைய தேசிய, விசேட அடையாள அட்டைகளும், ஆசிரியர் அடையாள அட்டையும்பேர்ஸுடன் யாழ். கோயில் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 29/3, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும். (61886)

### மணமகள் தேவை

சுவிற்சர்லாந்தில் ஹோட்டல் ஒன்றில் தொழில்புரியும் கெளரவ குடும்பம் வயது 34, இந்துசமய மணமகனுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம் புநர்பூசம் 1 ஆம் கால் செவ்வாய் தோஷமில்லை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. விளம்பர இல. 832 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (61853)

### அலங்கார வகுப்பு

கேக் ஐசிங், தலையலங்காரம், முக ஒப்பனை, (Facial Make - up) இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், தையல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆரம்பம் தை-15 முன் கூட்டியே பதிவு செய்யவும். ''நித்திய கல்யாணி'' தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலி. (61899)

### விற்பனைக்கு

தபாலில் பொதுவினா தொகுப்பு I உங்கள் முகவரியுடன் கோண்டாவில் மேற்கு உபதபாலகத்தில் மாற்றக்கூடியதான 45/- ரூபாவிற்கான காசுக்கட்டளையை அனுப்ப வேண்டிய முகவரி: தீபன், 281, பலாலி வீதி, கந்தர்மடம். (61904)

### ENGLISH MATHS

ஆண்டு 6 - O/L வரை, முதலாம் தவணைப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடைய வாரத்தில் 5 மணித்தியாலங்கள் வரை கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோவிலடி சிவன், மேற்கு வீதி, திருநெல்வேலி. (61906)

### திருத்துநல்

சகல கமெரா வகைகளும் எலக்ரோனிக்பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச்சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு.நாராயணசாமி, இல.301, கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டி சந்திக்கருகில், யாழ்ப்பாணம். (61857)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உண்டு. 67 ஆம் ஆண்டு பூசம் நட்சத்திரம் எங்களுடன் செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு Degree படித்த மணமகள் தேவை. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (61903)

# வடமராட்சி கிழக்குக்கு பொருள்கள் எடுத்துச் செல்ல முடியாத நிலை!

## வெள்ளத்தால் போக்குவரத்துப் பாதிப்பு

செம்பியன்பற்று, ஜன. 5

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப்பகுதியில் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து எழுதுமட்டுவாழ் நாகர் கோயில் வீதிப்போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியில் இயங்கும் மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்கடை பேக்கரி மற்றும் தனியார் வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கான உணவுப்பொருள்கள் உட்பட அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வது பாதிப்படைந்துள்ளது.

இதைவிட மாமுனை, செம்பியன்பற்று, குடாரப்பு, நாகர் கோயில் பகுதி மக்கள் தமது மீனைச் சந்தைப் படுத்த முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

நாகர் கோயில் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் தமது தேவைக்கு மட்டும் வெளி இணைப்பு இயந்திரப் படகு ஒன்றைப் பாவித்து போக்கு வரத்தில் ஈடுபடுகின்றனர்.

மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. பசுபதி கருத்துத் தெரிவிக்கையில், மக்களுக்குரிய உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல முடியாத நிலைமை நீடித்தால் இங்கு பெரும் அவல நிலை ஏற்படவழி ஏற்படும் என்றார்.

சம்பந்தப்பட்டவர்கள் மாற்றுப்பாதை ஒன்றை அதாவது மருதங்கேணி பருத்தித்துறை வீதி ஊடாக இங்குள்ள கிளைக்கடைக்கு உணவுப் பொருள் எடுத்துச்செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-36)

## நெடுந்தீவில் சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 5

நெடுந்தீவு தபாலகத்தின் கீழ் இயங்கி வரும் நெடுந்தீவு கிழக்கு உபதபாலகத்தில் கடந்த 40 வருடங்களாக உபதபாலதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி வ. தில்லையம்பலம். நெடுந்தீவு தபாலகத்தில் 36 வருடங்கள் தபால் ஊழியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற என். முருகேசு ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

தபாலதிபர் நா. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பலர் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினர். (இ-8)

## கிரனேட் தாக்குதலை அடுத்து கைதான ஈ.ரோஸ் உறுப்பினர்கள் விடுவிப்பு

மட்டக்களப்பு நகரில் ஈரோஸ் அலுவலகத்துக்கு அருகில் உள்ள மின்மாற்றி கிரனேட் தாக்குதலுக்குள்ளான சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த ஈரோஸ் அமைப்பின் மட்டக்களப்பு அமைப்பாளர் பிரபாகரனும் மற்றும் அந்த அமைப்பைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இவர்களுடன் கைது செய்யப்பட்ட எஞ்சிய ஆறு பேரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-3-21)

## வாடி வீட்டில் குழப்பம்; 8 அரச ஊழியர் கைது

வவுனியா, ஜன. 5

வவுனியா நகரின் உள்ள அரச வாடி வீட்டில் உடைமைகளைச் சேதமாக்கியது தொடர்பாக வவுனியாவில் உள்ள அரச திணைக்களங்களைச் சேர்ந்த எட்டு அரச ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் உள்ள பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த அரச ஊழியர்கள் அந்த வாடி வீட்டில் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்ததாகவும் —

அந்த விருந்தில் ஏற்பட்ட கைகலப்பு அங்கிருந்த பல உடைமைகள் சேதமடையக் காரணமாகின என்றும் —

இதன் காரணமாக பல ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகவும் — தெரியவந்தது.

இதையடுத்து விசாரணை செய்த பொலீஸார் எட்டு அரச ஊழியர்களைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாகக் கூறப்பட்டது.

வாடி வீட்டுக்கு ஏற்பட்ட நஷ்டஈட்டை இவர்கள் வழங்கும் பட்சத்தில் விடுவிக்கப்படுவர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-164)

## கும்பழாவளை கொம்பன் அருள்

நுண்கலை மன்றம் மீண்டும் ஆரம்பம்

1. ஆங்கில வகுப்புக்கள் 01 - 01 - 99
2. பாலர் பாடசாலை 06 - 01 - 99 புதன்கிழமை 8-30 மணி
3. பண்ணிசை வகுபபுக்கள் 06 - 01 - 99 புதன்கிழமை 3-00 மணி
4. மிருதங்க வகுப்புக்கள் 06 - 01 - 99 புதன்கிழமை 8-30 மணி
5. வயலின் வகுப்புக்கள் 06 - 01 - 99 புதன்கிழமை 8-30 மணி
6. நடன வகுப்புக்கள் 06 - 01 - 99
7. ஆண்டு 4 ஆண்டு 5 வகுப்புக்கள்

ஆலய தொண்டர் சபையினர்

செ நம்பியாரூரன் தலைவர்

தி. திருச்செந்தூரன் செயலாளர்

(61910)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்!

யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளரும் ''நியந்த்ரி'' அமைப்பின் செயலாளருமாகிய

**பிரம்மஸ்ரீ. ந. சதாசிவ ஐயர்**

அவர்கள் மேலதிக உதவிப் பதிவாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றதையிட்டு காஞ்சி காமகோடி பீடாதிபதியின் அருளாசியும், இலங்கை இந்துமதப் பீடாதிபதியின் குருவருளும் கிடைக்கப்பெற்று தீர்க்காயுசுடனும் பரிபூரண செல்வங்களும் பெற்று வாழ எல்லாம் வல்ல இலுப்பைத்தாழ் முருகனின் நல்லருளை வேண்டிப் பிரார்த்தித்து, வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ சிவ. நித்தியானந்தக்குருக்கள்,
சர்வதேச இந்துமத குருபீட,
யாழ். மாவட்ட அமைப்பாளர்.

சங்கானை.

(61914)

## S.L.A.S. ஆள்சேர்ப்புப் பரீட்சை

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வயதெல்லை 32 ஆகும்
இதற்குரிய விண்ணப்ப முடிவு திகதி: 31 - 1 - 99 வரை ஆகும்.

இப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு

பிரிவு II ஆரம்பம்: 9 - 1 - 99பி. ப. 2 மணி

ஆசிரியர்: திரு. அ. குமாரவேல்

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(61916)

## அறிவித்தல்

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம்**

( ஆட்டோ )

வருடாந்தப் பொதுக் கூட்டமும்,
புதிய நிர்வாகத் தெரிவும்.

காலம்: நாளை (06-01-99) புதன்கிழமை
நேரம்: காலை 10-00 மணி
இடம்: சங்கக் காரியாலயம் (முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்)

ஆட்டோ உரிமையாளர்கள், சாரதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(61911) - நிர்வாகத்தினர்.

## A/L 2001 கலை, வர்த்தகம்

வகுப்புக்கள் ஆரம்பம்: 09-01-1999 காலை 8.00 மணி
ஒரே ஒரு பிரிவு மட்டுமே நடைபெறும்.

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்.

நிர்வாகி
திருமதி எஸ். அருள்நங்கை

(61920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பருத்தித்துறை இறங்குதுறையை

# அதிகாரசபை பொறுப்பேற்கு முன்

# துறைமுகமாகப் பிரகடனம் செய்க

## யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 5
பருத்தித்துறை இறங்குதுறையை துறைமுகமாகப் பிரகடனம் செய்தே துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்க வேண்டும். அப்போது தான் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் நன்மை பெறுவதுடன் துறைமுகமாக அதை அபிவிருத்தி செய்யவும் முடியும்.

இப்படி யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை இறங்குதுறையை துறைமுக அதிகார சபை பொறுப்பேற்பது தொடர்பாக நேரில் ஆராய வந்த துறைமுக அதிகார சபை அதிகாரியிடமே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது-

பருத்தித்துறையில் ஆரம்பத்தில் மீன்பிடித்துறைமுகமே இருந்தது. பின்னர் கப்பலில்வரும் பொருள்களை இறக்க வசதியாக சில வேலைகள் மேற்கொள்ளப்பட்டு இறங்குதுறை மேடை அமைக்கப்பட்டது.

இந்த இறங்குதுறையை துறைமுக அதிகார சபை பொறுப்பேற்க முன்னர் அந்த இறங்குதுறையைத் துறைமுகமாகப் பிரகடனம் செய்ய வேண்டும்; அதைப் புனரமைக்க வேண்டும்.

அங்கு தற்சமயம் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் 60-க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் துறைமுக அதிகாரசபை ஊழியர்களாக உள்வாங்கப்பட வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலமே இந்தத் திட்டத்தால் பயன் கிடைக்கும்.

இப்படி அரச அதிபர் தெரிவித்தார். (இ-3)

## கந்தரோடையில் மேலும் 13 நீர்க்குழாய்கள்

வலிகாமம் தெற்கு, ஜன. 5
மேலும் பதின்மூன்று புதிய நீர்க்குழாய்கள் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் கந்தரோடைக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு, இக்கிரானை, கந்தரோடை மேற்கு ஆகிய பகுதிகளுக்கு புதிதாக நீர்க்குழாய்கள் விஸ்தரிக்கப்பட்டு அப்பகுதி மக்கள் குடி தண்ணீர் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய சமூக மனித நேய அமைப்பினால் வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் கந்தரோடைக்கிராமத்தில் பழுதடைந்த நிலையில் இருந்த பல குழாய்கள் திருத்தப்பட்டு நீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-152)

## நோயாளர் கப்பல்சேவை

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இம்மாதம் 5 தடவைகள் நடைபெற உள்ளன.

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு இருவாரங்களாக இச் சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதன்பின் இன்று செவ்வாய்க்கிழமை நோயாளர் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட நோயாளர்கள் இன்று காலை 7 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ - 139)

## நெல் அழிவு

நெல்லியடி, ஜன, 5
வடமராட்சிப் பகுதியில் சில தினங்களாக தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் வல்லைப்பகுதியில் நெல் வயல்கள் முற்றாக அழிந்துள்ளன. (இ-109)

## ஆனைக்கோட்டையில் 150 குடும்பங்கள் பாதிப்பு

நவாலி, ஜன. 5
ஆனைக்கோட்டை கிராம சேவகர் பிரிவிலுள்ள முள்ளி, கணேசு வீதி, 3 ஆம் கட்டை ஆகிய பகுதிகளில் 150 குடும்பங்கள்மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களது விவரங்கள் அப்பகுதி கிராம சேவையாளரினால் திரட்டப்பட்டு வருகின்றன. (இ-100)

## இருவர் உயிரிழப்பு

கடந்த சனியன்று அம்பகாமம் மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அம்பகாமம் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் தவசீலி (பரமானந்தம் சுகந்தி-நெடுங்கேணி) என்பவரும்—

மட்டக்களப்பு — செங்கலடியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஹரிவரசன் (வேலுப்பிள்ளை மகேந்திரகுமார்—நெடுங்கேணி) என்பவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## நெடுந்தீவில் மீனவருக்குக் கடனுதவி

நெடுந்தீவு, ஜன. 5
சுழற்சிக் கடன் உதவித் திட்டத்தின் கீழ் முதற் கட்டமாக இங்குள்ள ஐம்பது மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்கள் வாங்க கடன் வழங்கப்பட உள்ளது.

ஒருவருக்கு தலா பத்தாயிரம் ரூபா என்ற அடிப்படையில் ரூபா ஐந்து இலட்சம் கடனுதவி வழங்கப்பட உள்ளதாகவும் —

இக் கடன்கள் அறவிடப்பட்டதும் ஏனைய மீனவர்களுக்கு கடன் வழங்கப்படும் எனவும்— தெரிவிக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இதற்கென நிதியுதவி அளித்துள்ளது. நெடுந்தீவு கிராமிய வங்கிமூலம் கொடுப்பனவுகள் வழங்கப்படும். (இ-111)

# நாடகம் கற்கைநெறி மாணவருக்கு வரப்பிரசாதமாக அமைந்த சஞ்சிகை

## வெளியீட்டு விழாவில் சொக்கன்

யாழ்ப்பாணம், ஜன. 5
நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தைக் கற்கை நெறியாகக் கொண்ட உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ''கல்யாணி'' சஞ்சிகை நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

சுன்னாகம் அவைக் காற்றுக் குழுவினரால் நடத்தப்பட்ட ''கல்யாணி'' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய க. சொக்கலிங்கம் (சொக்கன்) இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது—

ஜி. சி. ஈ. உயர் தரத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தைக் கற்கும் மாணவர்கள் தமிழில் இப்பாடம் பற்றிய தரமான நூல்கள் இல்லாத நிலையில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அமரர் கல்யாண சுந்தரேசனை நினைவுபடுத்தும் வகையில் தொடர்ந்து வெளிவரவுள்ள ''கல்யாணி'' கட்டுரைத் தொகுப்பு சஞ்சிகை நூல் இவர்களது சிரமத்தைப் பெருமளவு நிவர்த்தி செய்யும் என எதிர்பார்க்கலாம்— என்றார்.

வெளியீட்டு விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை வகித்த பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் தமது தலைமையுரையில்—

'கல்யாணி' காலத்தின் தேவையை நிறைவேற்றும். இது கட்டுரைத் தொகுப்பும், சஞ்சிகையும் இணைந்த நூலாக வெளிவருவதால் சமகால நிகழ்வுகளாக இயல், இசை, நாடகம் சார்ந்த விடயங்களை ஆவணப்படுத்தும் பணியைக் காலவோட்டத்தில் நிறைவேற்றும்— என்றார்.

இந்நூலின் வெளியீட்டுரையை நிகழ்த்திய ஓய்வு பெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச. கல்யாண சுந்தரேசன் தமது உரையில் கூறியதாவது—

அன்ரன் செஹோவ் ருஷ்ய மொழியில் எழுதி எலிசவெ தாஃபென் ஆங்கில மொழியில் தந்த 'செர்ரிப் பழத் தோட்டம்' என்ற நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து 'கல்யாணியில்' தொடர்ச்சியாக எழுதி வருகின்றேன். நடாடகத்துறை சார்ந்த மாணவர்களுக்கு இயன்றவரை உதவி புரிவேன்— என்றார்.

நூலின் மதிப்பீட்டுரையை கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை, ந. கணேசமூர்த்தி, வை. மா. குருந்தர்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். (ஐ—8)

# செய்திக் கொத்து

### கண்காட்சி

நீர்வேலி, ஜன. 5
வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தினரின் பன்னவேலை, தையல் பயிற்சி நிலையங்களின் கண்காட்சி எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை உரும்பிராயில் நடைபெறவுள்ளது.

அ. த. க. கிருஷ்ணராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-110)

### கட்டட வேலைகள் நிறைவு

சங்கானை, ஜன. 5
வலி. மேற்கு பிரதேச சபையின் மூலம் ஒதுக்கப்பட்ட 1லட்சம் ரூபா நிதியிலிருந்து சங்கரத்தை சனசமூக நிலையத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. (இ-29)

### விளையாட்டு உபகரணங்கள்

கைதடி, ஜன. 5
கைதடி சைவச் சிறுவர் இல்லத்துக்கு யுனிசெவ் உதவித்திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த உபகரணங்களில் ஊஞ்சல், உதைராட்டினம், சதுரஏறற் சட்டம் என்பனவும் அடங்கும். (இ-74)

### குளோரின் விநியோகம்

புன்னாலைக்கட்டுவன், ஜன. 5
புன்னாலைக்கட்டுவன் பகுதியிலுள்ள கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்காக இப்பகுதியிலுள்ள சுமார் 150 குடும்பங்களுக்கு குளோரின் விநியோகிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார அதிகாரியால் வழங்கப்பட்ட குளோரின் புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசா சனசமூக நிலையத்தினர் மூலம் விநியோகிக்கப்பட்டது. (இ-133)

### அபிராமிப்பட்டர் விழா

பருத்தித்துறை. ஜன். 5
வடமராட்சி தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் வருடாந்த அபிராமிப்பட்டர் விழா இம்மாதம் 17 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது,

இவ்விழாவுக்கானகிரியைகளை சிவஸ்ரீ. தியாக சோமஸ்கந்தராசா குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்துவார்.

அன்றைய தினம் அபிராமி அந்தாதி பாராயணம். அம்பாள் வீதிவலம், மகேஸ்வர பூசை என்பன இடம்பெறும். (இ-118)

### வீதி புனரமைக்க நடவடிக்கை

கோப்பாய், ஜன, 5
கோப்பாய் வைத்திய சாலை வீதி புனரமைக்கப்படவுள்ளது. வைத்திய சாலை பொறுப்பதிகாரியின் வேண்டுகோளை அடுத்து வைத்தியசாலை அபிவிருத்திச்சபை இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-72)

### சனசமூக நிலையங்கள் புனரமைப்பு

வேலணை பிரதேசசபையினால் 1998 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மூலம் வேலணை 2 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள செட்டிபுலம் சனசமூக நிலையமும் வேலணை 6 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையமும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி புனரமைப்பு வேலைகளை வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பெடுத்துள்ளது. (இ-5)

### கல்வி வலயம் இடமாற்றம்

யாழ். கல்வி வலயம் இரண்டின் அலுவலகம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இருபாலையில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வந்த யாழ். கல்வி வலயம் இரண்டு புதிய கல்வி நிர்வாகம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (இ-118)

### மீள்பதிப்பு நூல் வெளியீடு

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் சித்தவைத்திய நூல்கள் மீள் பதிப்புச் செய்யும் மீள்பதிப்புக்குழுவினரின் செயற்பாட்டில்அடுத்த நடவடிக்கையாக பரராசசேகரம், பாலரோகநிதானமும் சிகிச்சையும் போன்ற நூல்கள் மீள் பதிப்புச் செய்யப்படுகின்றன.

இந்நூல்கள் வெகுவிரைவில் வெளியிடப்படவுள்ளதாக மீள்பதிப்புக்குழுவினரால் தெரிவிக்கப்பட்டது.

பரராசசேகரம் கர்ப்ப ரோக நிதானம் ஆகியவற்றின் ஒருதொகுதி முன்னர் வெளிபிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-15)

### வகுப்பறைக் கட்டடம்

வரணி, ஜன. 5
தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மூன்று அறைகளைக் கொண்ட இக் கட்டடமானது பூர்த்தியடையும் நிலையில் உள்ளது. (இ-171)

### விளையாட்டரங்கு அமைத்துத்தரக் கோரிக்கை

வடமராட்சிப் பிரதேசத்துக்கென தனியான பல வசதிகளும் கொண்ட விளையாட்டரங்கு ஒன்றை அமைத்துத்தருமாறு கரவெட்டிப் பகுதியிலுள்ள விளையாட்டுக்கழகங்கள் ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இப்பகுதியிலுள்ள 18 விளையாட்டுக்கழகங்கள் ஒன்றிணைந்து பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் ஐ.ரங்கேஸ்வரன் ஊடாக இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளன. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. வெல்லும் என கருத்துக் கணிப்பீடு

கொழும்பு, ஜன. 5

வடமேல் மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பீட்டின் படி ஐ.தே.கவுக்கு 23 சதவீதமும் பொ. ஐ. மு. கவுக்கு 15 சத வீதமும் ஜே.வி.பிக்கு 5 சத வீதமும் வாக்குகள் கிடைக்கலாமெனவும்—

வெற்றி பெறும் எந்தக் கட்சியும் கிறிய பெரும்பான்மையுடனே ஆட்சியைக் கைப்பற்றும் எனவும்— தெரிவிக்கப்படுகிறது.

(இ-5-10)

## நுவரெலியாவில்

# சீதையம்மன் ஆலய திறப்பு விழா ஏற்பாடு

கொழும்பு. ஜன. 5

நுவரெலியாவில் சீதையம்மன் ஆலய திறப்பு விழாவுக்கு முன்னோடியாக ஆன்மீக ஒற்றுமைச் சிறப்பு விழா நாளை முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை நுவரெலியாவில் நடைபெற உள்ளது.

கல்கத்தா மனோ மோடி பவுண்டேசனைச் சேர்ந்த சுவாமி பூர்ணிய சைண்ட் மொறா பாபு தலைமையில் ஆயிரம் சீதா, இராம பக்தர்கள் இந்த விழாவில் பங்கு பற்ற வருகின்றனர்.

இக்குழுவினர் இங்கு தங்கியிருக்கும் காலத்தில் நுவரெலிய சீதையம்மன் ஆலயத்தில் தினமும் ஸ்ரீராம ஜெபம், அகண்ட நாம பஜனை ஆகியவற்றிலும், இராமாயண கதாப்பிரசங்கங்களிலும் ஈடுபடுவர்.

மலையக எழுத்தாளர் தமிழ்மணி தி. இரா. கோபாலன் எழுதிய 'சீதையின் நகரம்' என்னும் நூலும் இந்த நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்படவிருக்கிறது.

இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை சீதா ஆலய அறங்காவலர் ஸ்ரீ. வி. ராதாகிருஷ்ணன் செய்து வருகிறார்.

(இ-3)

## முச்சக்கர வண்டிகள்

வலி. கிழக்கு, ஜன. 5

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அங்கவீனம் அடைந்த 27 பேருக்கு முச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

(இ-180)

## வடக்குக்கான தனியார்

# பயணிகள் கப்பல் சேவைக்கு இன்னும் அனுமதி இல்லை

## கொழும்பு -சென்னை சேவைக்கு முயற்சி

வடக்குக்கு பயணிகள் சேவை நடத்த கொள்வனவு செய்த கப்பலை கொழும்புக்கும் சென்னைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்த முயற்சி மேற் கொள்ளப்பட்டுள்ளது.

வடக்குக்கு பயணிகள் சேவையை நடத்தும் நோக்குடன் தனியார் நிறுவனம் ஒன்று கப்பல் ஒன்றைப் பெற்றிருந்தது.

இந்தக்கப்பலில் சில திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததால், காலித் துறைமுகத்தில் வைத்து அத் திருத்த வேலைகள் தற்சமயம்செய்யப்பட்டுவருகின்றன

வடக்குக்கு சேவையில் ஈடுபட அனுமதிதருமாறு இந்தக கப்பலைக் கொள்வனவு செய்தநிறுவனம் அரசாங்கத்தைகோரிவருகிறது.

ஆனால் அனுமதி வழங்க அரசாங்கம் பின்னடிப்பதால், அந்தக் கப்பலைக் கொழும்புக்கும் சென்னைக்கும் இடையில் ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்த நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே நேரம்— வடக்குக்கு பயணிகள் சேவை நடத்த கப்பல் ஒன்றைப்பெறும் முயற்சியில் வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## நெடுந்தீவில் வெள்ளம்

நெடுந்தீவுப் பகுதியில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக பிரதான வீதிகள், வீடுகள் அனைத்தும் வெள்ளத்தால் நிரம்பியுள்ளதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளனர். நெடுந்தீவு தபாலகத்திலும் வெள்ளம் புகுந்ததால் ஊழியர்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் பணியாற்றுகின்றனர்.

(இ-8)


DISSERTATION

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள்

பையின்ட் செய்து கொடுக்கப்படும்.

இருபிரதிகள் பையின்ட் செய்வதற்கான

கட்டணம்
ரூபா 350–00.

பாரதி பதிப்பகம்
430,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(61573)



யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
பகுதி D

கருத்தரங்குத் தொடர் 3
(1998-1999)

இடம்: புவியியல்துறை மண்டபம்,
யாழ். பல்கலைக்கழகம்
காலம்: 06 - 01 – 1999 3 மணி.
தலைவர்: பேராசிரியர், கா. குகபாலன்
பொருள்: "அபிவிருத்தி ஆய்வுகள்; துறைகளுக்கு இடையிலான அணுகுமுறையின் முக்கியத்துவம்"
கருத்துரை வழங்குபவர்:
கலாநிதி A. V. மணிவாசகர்,
தலைவர், அரசறிவியல், சமூகவியல்துறை.
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர், பகுதி D
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்.
(சி/5984)


ஓம் விராட் விஸ்வப்ரம்மனே நம

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் விஸ்வப்ரம்ம ஸ்ரீ

### சி. தா. கிருஷ்ணசாமி பத்தர்

தோற்றம்: 19 . 06 . 1920
மறைவு: 18 . 12 . 1997

திதி: 05–01–1999

அணைந்தும் அணையா ஜோதியாய் அன்பு, பாசம், பரிவுடன் குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் ஒளி விளக்காய்த் திகழ்ந்த ஐயா! ஆண்டு ஒன்று நிறையும் இந்நாளில் வேண்டுதல் செய்து வணங்குகின்றோம்.

வண்ணை நகர்க் காமாக்ஷி அன்னை பாதம்
வளமார்ந்த மலர் தூவித் துதிக்கும் அண்ணல்
வண்ணமிகு பொன்னணிகள் எழிலும் கொஞ்ச
வகை வகையாய் ஆபரணம் செதுக்கும் ஐயன்
எண்ணமெல்லாம் நாகபூஷணியாம் அன்னை
எழிலுக்கு எழிலூட்டும் அலங்காரத்தில்
கண்ணனைய பொற்கலைஞன் கிருஷ்ணசாமி
கண்ணுதலான் கழலடிகள் சேர்ந்தான் வாழி.

சாந்தி !

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்:

'ஸ்ரீ. நாகபூஷணி'
நகை தயாரிப்பாளர்,
671/1, கே.கே. எஸ். வீதி,
பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்.

(61902)


தைப்பொங்கலில் ஓர் இசைப்பொங்கல்

சாவகச்சேரி லயன்ஸ் கழக
நிதிக்காக
ஈழத்தின் இசைப்புயலாக விளங்கிய "ராஜன்ஸ்"
இசைக்குழுவின் முன்னணிக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட
ஈழநல்லூர் சந்திரனின் "ராகம்ஸ்"
இசைக்குழுவினர் வழங்கும்

இதயராகங்கள் திரை இசை நிகழ்ச்சி

பொப் இசைப் பாடகர் ஸ்ரனி சிவானந்தன், பிரபல பாடகர் திவாகர் ஸ்ரீகுமார், விஜிதரன், சுகந்தன், இசைக்குயில்கள்: சந்திரஜோதி, சாருமதி இவர்களுடன் வரதனும் பாடல்களை வழங்குகிறார்கள்.

நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளரும், தொகுப்பாளரும்
திரு. ச. தியானேஸ்வரசர்மா (தமிழ்ச்செல்வன்)
"ராஜன்ஸ்" அறிவிப்பாளர்

இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி அரங்கு
காலம்: 15 - 01 - 1999 (வெள்ளி) மாலை 2-00 — 5-00 வரை
(புதிய நேரம்)

லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.

விளம்பர அன்பளிப்பு:
அதி நவீன வீடியோ சாதனங்கள் மூலம் வீடியோபடம் பிடித்திட நாடுங்கள்
சதீஸ் வீடியோ & போட்டோ
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
(61902)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மக்கள் நலன் கருதுக!

யாழ்ப்பாண ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தர நாயகம் தமது புதுவருடச் செய்தியில், இனப்பிரச்சி னைக்கு நீதியோடு கூடிய நிரந்தரமான தீர்வு ஒன் றைக் காண்பதற்கு ஒத்து ழைக்குமாறு சம்பந்தப் பட்ட நான்கு தரப்பினரிட மும் வேண்டுகோள் விடுத் திருக்கிறார்.

இது பொதுவான அழைப் பாக அன்றி, அரசாங்கம், எதிர்க்கட்சி, விடுதலைப் புலிகள், தமிழ்க்கட்சிகள் ஆகிய தரப்பினரை விசேட மாகக் குறிப்பிட்டு வெவ் வேறு அணுகுமுறைகளைக் கைக்கொள்ள வலியுறுத்து வதாக அமைந்துள்ளது.

போரின் மூலம் சமா தானம் என்ற சுலோகத் தைத் தவிர்க்க வேண்டும். தீர்வு காண்பதென்பதனை பேச்சளவில் மட்டும் வைத் துக் கொள்ளாமல், காலத்தை இழுத்தடிக்கா மல், செயலில் துணிந்து இறங்க வேண்டும். நீதி யோடு கூடிய நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் — இவற்றை அரசிடம் வலி யுறுத்தி உள்ளார்.

கட்சி நலனை அன்றி நாட்டு நலனை மேலாகக் கருதுங்கள். தீர்வுக்கான முழு முயற்சியில் இதய சுத்தியுடன் அரசோடு ஒத்துழையுங்கள் — என்று எதிர்க்கட்சியினரைக் கேட் டுள்ளார்.

போரினால் மட்டுமே எமக்கு விடுதலை கிடைக் கும் என்ற கொள்கை யிலிருந்து விலகி, பேச்சு வார்த்தை மூலம் — கலந் துரையாடல், விட்டுக் கொடுத்தல், சமரசப் போக்கு என்பன மூலம் — தீர்வு காண முன்வாருங் கள் — என்று விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தமிழர்களின் குரல்ஏகோ பித்த வலுவான சக்தியாக மாறுவதற்காக, தமிழ் மக் களின் நலனுக்காக, தனிப் பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து, ஒன்று சேருமாறு — தமிழ்க் கட்சிகளிடம் வலியுறுத்தி உள்ளார்.

தமிழ் மக்களின் அவலங் களைப் போக்குவதற்கும் அவர்களின் பிரச்சினை களுக்கு நீதியான, நிரந் தரமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கும் ஆயர் குறிப் பிட்ட அணுகுமுறைகள் அந்தந்தத் தரப்பாருக்கு அவசியமே.

எப்போதும் இல்லாத வாறு, ஜனாதிபதி சந்தி ரிகா தமது நத்தார்ச் செய்தியில் நீதியுடன் கூடிய சமாதானம் குறித் துப் பிரஸ்தாபித்திருந்தார். திறந்த மனதுடன் செயற் படவேண்டும் என்றும் தெரி வித்திருந்தார். நீதியோடு கூடிய தீர்வைக் கொண்டு வந்தால் மட்டுமே நீதியுட னான சமாதானம் மலர முடியும்.

ஆகையால் ஆயர் வலி யுறுத்திய விடயங்களை கவ னத்தில் எடுத்து ஜனாதிபதி செயற்படுவாரா?

அதே போன்று ஏனைய மூன்று தரப்பினர்களிடமும் ஆயர் பொருத்தமான, அவ சியமான அம்சங்களையே வலியுறுத்தி உள்ளார்.

அவர்களும் தமது அணுகு முறைகளை மாற்றி நீதி யோடு கூடிய சமாதானம், நீதியோடு கூடிய தீர்வு ஆகியவற்றை அடை வதற்கு உழைக்க வேண் டிய கட்டாயம் உருவாகி உள்ளது. எல்லாத் தரப் பினரும் மக்கள் நலன் கரு திச் செயற்படுவார்களாக.

# உறுதி குலைந்த நிலையில் 'வெற்றி உறுதி';

# படையில் சேர தெற்கு இளைஞர் பின்னடிப்பு

**வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான தரைவழிப்பாதையைத் திறப்பதற்கென்று அரச படையினர் ஆரம்பித்த ''வெற்றி உறுதி'' (ஜய சிகுறு) இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டு 20 மாதங்கள் முடிவடைந்துவிட்டன. அதில் ஏற் பட்டுள்ள பின்னடைவுகளை ஆராய்கிற 'யுக்திய' சிங்கள வார இதழில் வெளியான இக்கட்டுரை.**

ஸ்ரீலங்கா சுதந்திர மடைந்து தனது 50 ஆவது ஆண்டு நிறைவை 1998 பெப் ரவரி 4 ஆம் திகதி கொண் டாடுவதற்கு முன்னர் யாழ். கண்டி வீதியை (ஏ 9) கைப் பற்றுவது என போருக்குப் பொறுப்பான அரசின் தலை வர்கள் வாக்குறுதியளித்திருந் தனர். கண்டியில் நடைபெற இருந்த சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாட் டத்தின் போது யாழ். கண்டி வீதியைத் திறந்து போக்கு வரத்தை ஆரம்பிக்க அரசு திட்டமிட்டிருந்தது.

இவ்வாறு போக்குவரத்தை ஆரம்பிப்பதாயின் 1998 பெப் ரவரி 4 ஆம் திகதிக்கு முன் னர் யாழ். கண்டி வீதி கைப் பற்றப்பட்டிருக்க வேண்டும். எனவே இந்த ஆண்டு (1999) எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறாத ஒரு சூழ்நிலை யிலேயே பிறக்கிறது என லாம்.

கடந்த ஆண்டில் அரசு பெருத்த எதிர்பார்ப்புகளு டன் கூடிய திட்டங்களை வைத்திருந்தது. எனவே 1998 இல் வடக்கு—கிழக்கில் முக் கிய யுத்த நடவடிக்கைகளைக் கொண்டதாகவும் அரசியல் பிரதிபலிப்புக்களை ஏற்படுத் தக் கூடியதாகவும் ''வெற்றி உறுதி'' (''ஜயசிகுறு'') இராணுவ நடவடிக்கை அமைந்திருந்தது. இருப் பினும் அரசின் யுத்தத்திற்குப் பொறுப்பான தலைவர்களின் எதிர்ப்பார்ப்புக்கள் அனைத் தையும் தகர்த்து ''ஜயசி குறு'' ராணுவ நடவடிக்கை யானது 21 ஆவது மாதத்தில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் அந்த நட வடிக்கையை மாங்குளம் சந்தி யுடன் நிறுத்த நேரிட்டுள் ளது.

கடந்த வருடம் செப்ரெம் பர் மாதம் மாங்குளம் நோக்கிப் புறப்பட்ட ''ஜயசி குறு'' படையணி 1998 டிசெம் பர்மாதம் வரை அதாவது மூன்று மாதங்களாக அங்கு தரித்து நின்றது.

இருப்பினும் சில வாரங் களுக்கு முன்னர் ''ரிவிபல'' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற் கொண்டு ஒட்டுசுட்டான் வரை சென்றடைந்துள்ளது. இந்த நடவடிக்கையின் போது இரு தரப்பிற்கும் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றிய தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

### ஜயசிகுறு முதல்வாரம்

1997 மே மாதம் 13 ஆம் திகதி ''ஜயசிகுறு'' இரா ணுவ நடவடிக்கை ஆரம்ப மானது. வவுனியாவிலுள்ள நொச்சிமோட்டையில் இருந்து முன்னேறிய 'ஜயசி குறு'' படையினர்முதலாவது வாரத்திலேயே ஓமந்தை யைச் சென்றடைந்தனர். விடு தலைப் புலிகள் தரப்பிலி ருந்து எதிர்பார்த்த எதிர்ப்பு கள் காணப்படாத காரணத் தால் மிக இலகுவாக ஓமந் தையை படையினர் சென்ற டைந்தது குறித்து கருத்துத் தெரிவித்த முன்னாள் விமா னப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஹரி குணதி லகா ன்வருமாறு தெரிவித் திருந்தார்.

''இரண்டு அல்லது மூன்று மாதங்களில் முன்னேற முடிந்தாலும் அது குறுகிய கால வெற்றியாகவும் நீண் டகாலத் தோல்வியாகவுமே அமையும். ஏனெனில் இது எதிர்காலத்தில் ஆபத்துகள் அதிகம் நிறைந்ததாகும்'' எனக் கூறியிருந்தார்.

இருப்பினும் ஓமந்தையைச் சென்றடைந்த வேகத்தைக் கருத்திற் கொண்டு அதிக நம்பிக்கை கொண்ட அரச படைத் தலைவர்கள் 90 நாள்களில் மாங்குளம் சென் றடைவதற்கான திட்டத் தைத் தீட்டினர். இதன் பின் னர் படையினர் புளியங் குளம் நோக்கி முன்னேறிய போது படிப்படியாக மோதல்கள் அதிகரித்தன. 1997 டிசெம்பர் மாதத்தில் புளியங்குளத்திலிருந்து மாங் குளம் நோக்கிய நகர்வு ஆரம் பமானது. 'ஜயசிகுறு' இரா ணுவ நடவடிக்கை ஆரம்ப மாகி 215 நாள்கள் முடி

**தமிழில்: கஜனி**

வுற்ற தினத்தன்று (அதா வது 1997 டிசெம்பர் 10 ஆம் திகதியன்று) கனகராயன் குளம், முன்னணிக் காவலரண் களில் கடும்மோதல்கள் இடம் பெற்றன. இந்த மோதல் களின் போது படையினர் தரப்பில் சுமார் 200 பேரும் புலிகள் தரப்பில் சுமார் 200 பேரும் பலியாயினர். இரு தரப்பிலும் காய மடைந்தோரின் எண்ணிக்கை 500 -க்கும் அதிகமாகும்.

### மிகப்பெரிய மோதலாகும்

'ஜயசிகுறு' இராணுவ நட வடிக்கையில் அதுவரை இடம் பெற்ற மோதல்களில் அதுவே மிகப்பெரிய மோதலாகும். கனகராயன் குளத்திலிருந்து மாங்குளம் நோக்கிய பய ணத்திற்கான ஏற்பாடுகளு டன்1998-ம்ஆண்டு பிறந்தது. இதன்படி வவுனியாவில் 74 கி. மீற்றர் தூரம் கொண்ட பயணத்தில் இன்னும் 30 கி. மீற்றர் தூரமே கைப்பற்ற எஞ்சியிருந்தது. ''ஜயசி குறு'' படையினர் கனகரா யன்குளம் முன்னணிக் காவல் அரண்களில் நிலை கொண்டி ருந்த வேளையிலேயே 1998 ஆம் ஆண்டு பிறந்தது.

1998 இல் ''ஜயசிகுறு'' நடவடிக்கை இடம்பெற்ற வேளையில் வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்களில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர் தல்கள் முக்கிய இடத்தைப் பிடித்தன. எதிர்பாராத அமைதியான சூழ்நிலையில் 1998 ஜனவரி 29 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன, நெடுந்தீவில் அமைந்திருந்த ஈ. பி. டி பி அமைப்பின் முகாம் விடுத லைப் புலிகளால் தாக்கப் பட்ட சம்பவத்தைத் தவிர தேர்தல் காலத்தில் முக்கிய -பெரிய- சம்பவங்கள் வேறு எவையும் இடம்பெறவில்லை. இருப்பினும் யாழ்ப்பாணத் தில் நிலவிய போர் ரீதியான நிலைமை குறைந்ததாகத் தெரியவில்லை.

### யாழ்ப்பாண உள்ளூராட்சி சபைகள்

உள்ளூராட்சி சபைகள் உரிய முறையில் செயற்பட வில்லை. அதே நேரம் அவற் றில் பல செயலிழந்த நிலையை அடைந்துள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி யின் அதிகாரத்திலுள்ள யாழ். மாநகர சபையின் முதல்வராக விளங்கியதிருமதி சறோஜினி யோகேஸ்வரனும் பின்னர் மாநகர முதல்வரா கப் பதவியேற்ற பொ.சிவபா லனும் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டனர். அதே வேளை யாழ். பொதுமக்க ளிடையே நன்மதிப்பைப் பெற்றுவந்த பிரிகேடியர் லரி விஜேரத்ன மற்றும் பிரிகேடி யர் சுசந்த மெண்டிஸ் ஆகி யோரும் விடுதலைப் புலிக ளால் படுகொலை செய்யப் பட்டனர். உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்ற வேளையில் யாழ்ப்பாணத்தில் நிலவிய அமைதியான சூழ் நிலை தற்போது யாழ்ப்பா ணத்தில் இல்லை.

''லயன் எயார்'' விமானச் சம்பவத்துடன் உள்நாட்டு விமான சேவையை நிறுத்த விடுதலைப் புலிகளால் முடிந் தது. கடற் பயணங்களும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி யுள்ளன. யாழ்ப்பாணத்தில் படையினரால் விடுவிக்கப் பட்ட பகுதிகளில் சிவில் நிர் வாகத்தை ஏற்படுத்துவதற் குப் பதிலாக இராணுவ நிர் வாகத்தைப் பலப்படுத்தும் முயற்சிகளே இன்று நடை பெற்று வருகின்றன.

### 9 மாதங்களில் 12 கிலோ மீற்றர்கள்

கிளிநொச்சி வரையான யாழ். கண்டி வீதி 72 கி. மீற் றர் தூரத்தில் 42 கி. மீற்றர் தூரத்தைக் கடந்து மாங் குளம் சந்தியை ''ஜயசிகுறு'' படையினர் சென்றடைந்துள் ளனர். விடுதலைப்புலிகளுக்கு முக்கியமான இச்சந்தி இழக் கப்பட்டுள்ளது. இருப்பினும் விடுதலைப்புலிகள் மாங்குளம் நகரை இழப்பதற்குச் சரி யாக ஒரு நாளுக்கு முன்னர் படையினரின் கட்டுப்பாட் டில் இருந்த கிளிநொச்சி நகரை படையினருக்கு பாரிய தோல்வியை ஏற்படுத்திக் கைப்பற்றினர்.

கனகராயன் குளத்தில் இருந்து மாங்குளம் வரை யான 12 கி. மீற்றர் தூரத் தை சென்றடைவதற்கு படையினருக்கு 9 மாதங் கள் எடுத்தது. மாங்குளத் தில் கடந்த 3 மாதங்க ளாக படையினர் தரித்து நிற் கின்றனர். இதன்படி கனக ராயன் குளத்திலிருந்து மாங் குளம் வரையான படையின ரின் நகர்வுக்கு சுமார் ஒரு வருடம் எடுத்துள்ளது. இந் தப் பயணத்தின் போது ஸ்ரீலங்கா படையினருக்கு ஏற் பட்ட உயிரிழப்புகள் இரண் டாயிரத்திற்கும் அதிக மாகும். கிளிநொச்சி மோத லின்போது மாத்திரம் சுமார் ஆயிரத்து 500 படையினர் பலியாகியுள்ளனர். நவம்பர் மாதத்தில் இடம்பெற்ற விடு தலைப் புலிகளின் மாவீரர் வாரத்தின் போது விடுதலைப் புலிகள் வெளியிட்ட தகவல் களின்படி 1998 ஆம் ஆண்டில் பலியான விடுதலைப் புலி உறுப்பினர்கள் சுமார் 2 ஆயி ரம் பேர் ஆவர்.

### படையில் சேர பின்னடிப்பு

கனகராயன் குளத்தில் மோதல்கள் இடம்பெற்ற வேளையில் இருந்து ''ஜயசி குறு'' படையணிக்கு ஆள ணியை இட்டு நிரப்பும் பணி கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. கனகராயன் குளத் தில் இடம்பெற்ற மோதல் களைத் தொடர்ந்து குடா நாட்டில் பணியில் ஈடுபட் டிருந்த 37 ஆயிரம் படையின ரில் 7 ஆயிரம் படையினரை ''ஜயசிகுறு'' நடவடிக்கைக் காக அழைக்க நேரிட்டது. மேலும் இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதற்காக பிரசார இயந்திரங்கள்பெரியஎடுப்பில் முடுக்கி விடப்பட்டுள்ளபோதி லும் படையில் சேர்வதற்கு குறைந்த எண்ணிக்கையி லானவர்களே முன்வருவதால் ''ஜயசிகுறு'' நடவடிக்கை தொடர்பாக சாதகமான பலன் ஏதும் கிட்டவில்லை.

மேலும் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள் ளது. இதனால் ''ஜயசிகுறு'' படையினருக்கு ஆளணிப் பிரச்சினை உருவாகியுள்ளது. இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடியவர்களை மீண்டும் இரா ணுவத்தில் சேர்ப்பதற்கு1998 இல் பொது மன்னிப்பு காலம் பல முறைகள் வழங்கப்பட்ட போதிலும் உரிய பலா பலன் கள் கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து இராணுவத்தி லிருந்து தப்பி ஓடியவர் களைக் கைது செய்யும் நட வடிக்கை ஆரம்பமானது. அதுவும் எதிர்பார்த்த பலனை யளிக்கவில்லை.

இராணுவத்திலிருந்து சுமார் 25 ஆயிரம் பேர் தப்பி ஓடினர் எனத் தெரிவிக்கப் பட்டது. பல்வேறு நட வடிக்கைகள் மூலமாக மீண் டும் சேர்க்கப்பட்ட பின்னரும் சுமார் 10 ஆயிரம் பேர் இன் னும் தப்பி ஓடியவர்களாகவே உள்ளனர்.

மாங்குளம் நகரைக் கைப் பற்ற கடந்த வருடம் மே மாதம் 28 ஆம் திகதி திட்ட மிடப்பட்டது. இந்தத் திட் டம் நடைமுறைப்படுத்தப் பட்டு 8 நாள்களின் பின்னர் அதாவது 1998 ஜூன் மாதம் 5 ஆம் திகதி பொ. ஐ. முன் னணி அரசு 3 ஆவது முறை யாக யுத்தம் தொடர்பான செய்தித் தணிக்கையை நடை முறைக்குக்கொண்டு வந்தது. இந்தச் செய்தித் தணிக்கை இன்னும் அமுலில் உள்ளது.

### குறிப்பிடும்படியான வெற்றி இல்லை

யுத்தம் தொடர்பாக பல் வேறு சந்தர்ப்பங்களில் பல் வேறு கதைகளைக் கூறி வரும் அரசின் போர்த் தலை வர்கள் யுத்தத்தின் தற் போதைய நிலை குறித்து திருப்திகரமாகவே பேசிவரு கின்றனர். இருப்பினும் சில மாதங்களுக்கு முன்னர் அதா வது கிளிநொச்சித் தோல் விக்கு முன்னர் யுத்த வெற்றி கள் குறித்த படங்களுடன் கூடிய புள்ளி விவரங்கள் பாது காப்பு அமைச்சினால் வெளி யிடப்பட்டிருந்தது. அந்தப் படம் மற்றும் விவரங்களின் படி 1997 ஆம் ஆண்டில் யுத் தத்தில் குறிப்பிடும்படியான வெற்றிகள் எவையும் கிடைக்கவில்லை என்பது தெளிவாகிறது.

அரசாங்கம் வெளியிட்ட அந்த அறிக்கையின் படி 1997 நவம்பர் மாத வாக் கில் அரசாங்கம் விடுவித்த பிர தேசங்களில் வாழ்ந்த பொது மக்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 43 ஆயிரத்து 600 பேர் ஆகும். விடுவிக்கப்பட்ட பிரதேசத்தின் விஸ்தீரணம் 5 ஆயிரத்து 343 சதுர கி. மீற்றர் ஆகும். 1998 இல் படையினரால் விடுவிக்கப் பட்ட பிரதேசத்தின் விஸ் தீரணமும் இதே அளவைக் கொண்டதாகும். இருப்பினும் சனத்தொகை கடந்த வருடம் முன்னரைவிட 8,200 பேர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை**

மார்கழி 22

புதன்கிழமை

திதி: பஞ்சமி முழுவதும்

நட்சத்திரம்: மகம் பிற்பகல் 1. 58 வரை.

சுபநேரம்: 5.01 - 6.31

ராகுகாலம்: 12.31-02.01

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அறநெறி பற்றிப் பேசு வதன்று, அறநெறியில் நடப்பதே சுவர்க்கத்தில் கொண்டு சேர்க்கும்.

— ஹென்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## குருபாதம்
### மனையியற் பயிற்சி வகுப்பு

நல்லை திருஞானசம்பத்தர் ஆதீனம் நடத்தும் 1999 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்பு ஆரம்பம்.

காலம்: 08 - 01 - 1999 வெள்ளி
மாலை 2-30 மணி

- தையல்
- சமையற்பாகம்
- பூவேலை
- கைப்பணி
- மணமகள் அலங்காரம்
- துணியில் வர்ணம் தீட்டுதல் (நவீன முறை பப்றிக் பெயின்ரிங்)
- கம்பளி நூல் வேலை
- கோலம்

(62924) மேலாளர்

## உறுதி குலை...

(ஏழாம் பக்கத் தொடர்)

அதிகமாகும். இதன்படி ''ஜயசிகுறு'' நடவடிக்கையின்போது 1998 இல் இடம் பெற்ற அழிவுகள் மற்றும் உயிரிழப்புகளுடன் ஒப்பிடுகையில் நிலையில் குறிப்பிடத்தக்களவு வித்தியாசமில்லை எனலாம்.

இருப்பினும் 1997 இல் யுத்தத்திற்கான செலவு 4,450 கோடி ரூபாவாக இருந்தது. ஆனால் 1998 இல் இந்தச் செலவு 5,050 கோடி ரூபாவாக அதிகரித்தது. இவை குறித்து அரசு கவனம் செலுத்தாதிருப்பது துர்பாக்கியமாகும்.

★

## பரீட்சைக்கு விண்ணப்பம்

கொழும்பு, ஜன.5

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப்பட்டப் படிப்பு முதல் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்குப் பொறுப்பான பேராசிரியர் வி நந்தகுமார் தெரிவித்தார்.

விண்ணப்பங்களை எதிர் வரும் 21 ஆம் முன் திகதிக்கு அனுப்பவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

## திருத்தம்

சித்தன்கேணி, சமூக தொழில் நுட்பக் கல்வி நிலையம் (கொமரெச்) 30-12-1998 ஆம் திகதிய உதயன் 8 ஆம் பக்கத்தில் வெளியிட்ட விளம்பரத்தில் உள்ள—

பெண்களுக்கான தையல் பயிற்சி, ரீ. வி ரேடியோ திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான பயிலுநர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன — என்றமூன்றாவது பந்தியை—

பெண்களுக்கான தையல் பயிற்சி ரீ. வி, ரேடியோ திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கான பயிற்றுநர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன — என்று திருத்தி வாசிக்கவும்.

# PATRICIAN INSTITUTES
# பற்றீஷன்
## தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

### தொழில்நுட்ப பயிற்சி நெறிகள், புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

## ஆரம்பம்: 11 - 01 - 1999

1) COMPUTER COURSES:
   a) LOTUS 1 - 2 – 3 ★ DURATION 6 MONTHS
   b) d BASE III PLUS ★ DURATION 6 MONTHS
   c) WINDOWS 95 MS WORD, MS EXCEL, MS ACCESS ★ DURATION 6 MONTHS

   ( Week Days & Weekend Class )
   (போதியஅளவு செய்முறைகள் [PRACTICALS CLASS] வழங்கப்படும்.)

2) BOOK - KEEPING & ACCOUNTS:
   ( I. A. B. ) ★ DURATION 6 MONTHS

3) CIVIL DRAUGHTSMAN-SHIP COURSE: ★ DURATION 6 MONTHS

4) SHORT HAND & TYPING ( English )
   ஆங்கில சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும்.

5) SHORT HAND & TYPING ( Tamil ). ★ DURATION 6 MONTHS

6) GENERAL MOTOR MECHANISM.
   மோட்டார் வாகனம் திருத்துதல்.
   ( Petrol & Diesel வாகனங்கள் )
   ( மூன்று மாதம் PRACTICALS வழங்கப்பட்டு பின்னர் சான்றிதழ் வழங்கப்படும். ★ DURATION 6 MONTHS

7) ELECTRICAL WIRING.
   மின்சார இணைப்பு. ★ DURATION 3 MONTHS

8) MOTOR REWINDING.
   மோட்டார் ரீவைண்டிங். ★ DURATIDN 4 MONTHS

9) GENERAL ELECTRICIAN.
   ஜெனரல் எலக்ரீஷன். ★ DURATION 6 MONTHS

( மேற்படி (7) (8) (9) பயிற்சி நெறிகளுக்கு மூன்று மாதம் PRACTICALS வழங்கப்படும் இதன் பின்னர் சான்றிதழ் வழங்கப்படும்).

10) LATHE MACHINE OPERATION.
    கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி. ★ DURATION 3 MONTHS

11) ARC WELDING.
    மின் ஓட்டுனர் பயிற்சி ★ DURATION 2 MONTHS

12) CARPENTRY.
    மரவேலை
    ( With use of Machinery )

13) RADIO & T.V. REPAIRING,

14) BLACKSMITH.

NOTE:

1) பயிற்சிக் கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்தலாம்.
2) வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரங் காட்டி பங்குத் குருவானவரின் ( Parish Priest ) சிபார்சின் பேரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3) பயிற்சி நெறி சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### PRODUCTION AND REPAIRING ON ORDER...!
### கட்டமைத்தலும், திருத்துதலும்

சகல விதமான இரும்புசார் உற்பத்திப் பொருள்களும், ஒட்டு வேலைகளும், பரந்தளபாடங்களும் உறுதியான தொழில் சார் அறிவு மூலமும் ஒடருக்கு மிக விரைவாகவும், திறமையாகவும் செய்து கொடுக்கப்படும். அத்துடன் FRIDGE, WATER PUMPS, ELECTRICAL பொருள்கள் சம்பந்தமான சகல வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

### வாகன தகுதிச் சான்றிதழ் — 1999
### FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE

1999 ஆம் ஆண்டுக்கான வாகன தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன என்பதனை அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### VACANCY
### COMPUTER INSTRUCTOR
### கணனிப் போதனாசிரியர்

மேற்படி பதவிக்குச் சிறந்த தகைமை உள்ளவர்கள் உடன் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:

**REGISTRAR**
**PATRICIAN INSTITUTES**
**59, St. PATRICK'S ROAD,**
**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த மக்கள் வீடு திரும்புகின்றனர்

## வெள்ளம் வடிகிறது

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழை தணிந்ததையடுத்து, அங்கு இடம் பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பி வருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வந்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் ஆறாயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருந்தன.

மழை தணிந்ததையடுத்து அவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்புகிறதாகவும்- அவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்க படிவங்கள் நேற்று முதல் விநியோகிக்கப்படுவதாகவும்- செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக்காலத்தில் வெள்ளம் காரணமாக கூடுதலான மக்கள் இம்முறையே இடம் பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொருள், உடைமைகள் பெரிய அளவில் சேதம் அடைந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

# காட்டுப் பன்றிகளால் நெற் பயிர்கள் நாசம்

யாழ்ப்பாணம், ஜன. 5

புத்தூர் கிழக்கு, வாகரவத்தை, சிறுப்பிட்டிப் பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வயலில் இறங்கும் இப் பன்றிகள் வயலை உழுது நெற்பயிர்களை நாசம் செய்வதாகவும் நெல்கதிர் கட்டும் இக்காலவேளையில் பன்றிகளின் இத்தொல்லையால் விவசாயிகள் பெருநட்டமடைய நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மட்டுவில் பகுதியிலும் காட்டுப் பன்றிகளின் தொல்லை அதிகரித்திருந்தது தெரிந்ததே. அதே பன்றிக் கூட்டமே புத்தூர் கிழக்குப் பகுதிக்குள் நுழைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இப்பகுதியில் கடந்த வாரம் ஒரு காட்டுப்பன்றி மக்களால் அடித்துக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.


புதிய பிரிவு
புலமைப் பரிசில்
வகுப்புக்கள்
ஆரம்பம்: 09-01-1999
Sat. 2 p. m,

- ஒவ்வொரு வகுப்புக்கும் முதல் 25 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
- அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.

BOND யாழ். நகர்
(61938)



SHAMROCK
யா / ஈச்சமோட்டை வீதி.
A/L 2001
ஆரம்பம்: 06-01-99
புதன் 3-00 p.m.
ECON.
Mr. இராஜேஸ்வரன்
COM. Mr. பசில்
ACC. Mr. பாலவாசன்
Common General
Paper
Mr. தவசேகர்
LOG. Mr. மகிந்தன்
TAMIL Mr. அருள்
CHRIS. Mrs. A. மல்லிகா
HINDU. Mr. நித்தி
DRAMA Mr. ஜோண்சன்
GEO. Mr. பவான்
(சி/6009)



கிறிஸ்ரல்
சென்ரர்
நெல்லியடி
A/L 2000
2001
COMMON GENERAL
Paper (I. Q)
ஆரம்பம்: 7-1-99
காலை 6-30 மணி
ஆசிரியர்:
த. தவசேகர்

DAY CLASS
A/L 99
வணிகக்கல்வி
B. பசில்
கணக்கியல்
D SAM
புள்ளிவிவரவியல்:
த். தவசேகர்
பொருளியல்
திரு. விக்கி
அளவையியல்
V. ரகுமார்
புதிய பிரிவு ஆரம்பம்
7-1-99
காலை 8-00 மணி
(வணிகப் புள்ளிவிவரவியல் நடைபெறும்.)
(81922)



யாழ். மாவட்ட
வர்த்தகர் சங்கங்களின்
சம்மேளன நிதிக்கான
அதிர்ஷ்டலாபச் சீட்டு

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளன நிதிக்காக விற்பனையாகும் அதிர்ஷ்டலாபச் சீட்டினைப் பெற்று அதி பெறுமதி வாய்ந்த பரிசில்களை வெல்வதற்கு யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனத்தின் கீழ் உள்ள சகல வர்த்தகர் சங்கங்களிலும், அவ் வர்த்தக சங்கங்களின் அங்கத்துவ வர்த்தக ஸ்தாபனங்களிலும் உங்கள் அதிர்ஷ்டலாபச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி அதிர்ஷ்டலாபச் சீட்டுப் புத்தகங்கள் பெற விரும்பும் வர்த்தக ஸ்தாபனங்கள் யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். மாவட்ட
வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்
இல. 37, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
(சி/6012)


# அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து செயலாளர்களுடன் ஆராயப்படும்

## வடக்கு - கிழக்கு ஆளுநர் நடவடிக்கை

திருகோணமலை, ஜன. 5

வடக்கு — கிழக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மாகாணசபைச் செயலாளர்களுடன் ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா அடுத்த மாதம் ஆராயவிருக்கின்றார்.

வடக்கு — கிழக்கில் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஒவ்வொரு அமைச்சும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆளுநர் அமைச்சுச் செயலாளர்களை கேட்டுள்ளார்.

இந்த வருடத்தில் மேற்கொள்ளவேண்டிய திட்டங்களை வருட ஆரம்பத்தில் வகுத்து, அதற்கான நிதியைப் பெற்று அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தை ஆளுநர் செயலாளர்களுக்கு வலியுறுத்தியுள்ளார்.

அதன் பின்னர் நிதியைப் பெற்று திட்டங்களை மேற்கொள்ள வருடம் பூர்த்தியாகி விடும் என்றும் — இதன் காரணமாக திட்டங்களை கைவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது என்றும் — அரச அதிகாரிகள் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதன் காரணமாக திட்டங்களை நேர காலத்துடன் வகுக்க மாகாண அமைச்சுச் செயலர்களுடன் ஆளுநர் கலந்துரையாடவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# குளத்தில் மூழ்கி குடும்பஸ்தர் மரணம்

நெல்லியடி, ஜன. 5

குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கிப் பலியானார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் (ஞாயிறு) மாலை 3 00 மணியளவில் கரணவாய் முருகையன் கோயிலடி குளத்தில் இடம்பெற்றது.

கரணவாய் அண்ணாசிலையடியைச்சேர்ந்த ஆறுபிள்ளைகளின் தந்தையானசின்னையா-இராசதுரை (வயது 36) என்பவரே மரணமடைந்தவராவார்,

இவரது சடலம் மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளையும் மரணவிசாரணையை பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரனும் மேற்கொண்டனர்.

நீரில் மூழ்கியதனால் ஏற்பட்ட விபத்துமரணமெனத் தீர்ப்பு வழங்கி உறவினரிடம் சடலம் கையளிக்கப்பட்டது (ஐ-109)

## மதுபோதையில்

# பெற்றோரைக் கத்தியால் வெட்டிய புதல்வர்கள்

தென்மராட்சி ஜன. 5

பிள்ளைகளால் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ஒரு தாயும், ஒரு தந்தையும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மருதடி வீதியைச் சேர்ந்த ஆ. நாச்சிப்பிள்ளை (வயது 64) என்பவரும். மீசாலை மேற்கு. சாளியத்தையைச் சேர்ந்த மா. கந்தசாமி (வயது 44) என்பவருமே வெவ்வேறு இடங்களில் வைத்துக் கத்தி வெட்டுக்கு இலக்காகினர்.

மதுபோதையில் வந்த பிள்ளைகளை இவர்கள் கண்டித்தபோதே கத்திவெட்டுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

# சிலுவைமரம் அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலய சிலுவை மரம் திருடர்களினால் வெட்டி அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

30 அடி நீளமான இந்த மரத்தில் சுமார் 20 அடி நீளப் பகுதி வெட்டி எடுக்கப்பட்டுள்ளது.

ஆலய உண்டியலும் அடிக்கடி உடைத்துத் திருடப்பட்டு வருவதாகவும், கடந்த மூன்று மாதங்களில் நான்கு தடவைகள் உண்டியல் உடைத்து பணம் திருடப்பட்டதாகவும், ஆலய பங்கு மக்கள் தெரிவித்தனர். (ஐ-15)

# இளைஞர் காயம்

தென்மராட்சி, ஜன. 5

வேகமாக வந்த மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்த இளைஞர் ஒருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனி மாலை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் வீதியின் குறுக்கே வயோதிபர் ஒருவர் நடந்து சென்றதால் திடீரென அதனை நிறுத்த முயன்றபோது தூக்கி வீசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த நடராசா சிவாகரன் (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார்,

[ஐ-117]


உ
இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் நடத்தும்
இந்து மதகுருமார்களுக்கான
பயிற்சித் திட்டம்

மேற்படி பயிற்சித் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறவிருக்கின்ற அந்தண சிவாச்சாரியர்களும் இளைஞர்களும் (8 – 14 வயதுக்கு உட்பட்ட சிறார்களும்) தங்களுக்குரிய விருப்பத்தைத் தெரிவிக்கும் முறையில் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களைக் கீழ்வரும் இடங்களில் பெற்று 25 - 01 - 1999 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்து அவற்றைப் பெற்ற இடங்களிலேயே சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றோம்.

1. இலங்கை இந்து மதகுருமார் ஒன்றியம்
   தலைமைக் காரியாலயம், இல. 74, பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
   ❀ இந்து மதகுருமார் ஒன்றியம், வடமராட்சி கிளைக் காரியாலயம்.
   ❀ இந்து மதகுருமார் ஒன்றியம், தென்மராட்சி கிளைக் காரியாலயம்.
   (தலைவர் இல்லம்)
2. "நியந்த்ரீ" அமைப்பு
   சிவன் கோயில், நல்லூர்.
3. பிராமண இளைஞர் சமாஜம்
   கற்பகப்பிள்ளையார் கோயில், உரும்பிராய்.
4. சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் J.P
   தர்மஸாஸ்தா குருகுலம், இணுவில்.

★ முக்கிய குறிப்பு: பயிற்சிக்குப் பொருத்தமானவர்களை இந்து மதகுருமார் ஒன்றிய வித்துவ சபை தெரிவுசெய்யும்.

நன்றி.

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்
தலைவர்

பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகர சர்மா
செயலாளர்

இந்து மதகுருமார் ஒன்றியம்,
தலைமைக் காரியாலயம்,
இல. 74, பிறவுண்வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(61929)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலீஸாரின்...

(முதலாம் பக்கம் பார்க்க)

இவர்கள் மாட்டுவண்டிலுடன் அரிக்கன் லாம்பு சகிதம் வீதிக்கு வந்த சமயம் அருகில் இருந்த காவலரணில் இருந்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம்செய்ததாகத்தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6-21)

## விமானப்...

(முதலாம் பக்கத் தொடர்)

இலங்கைவிமானப்படைக்கு இந்த ரக ஹெலிக்கெப்ரர் தொடர்பான இலவச பயிற்சியை வழங்குவதற்கும் 300 மணித்தியாலங்கள் அல்லது ஒருவருட உத்தரவாதத்துடன் இந்த இரு ஹெலிகளை வழங்கவும் இதனை உற்பத்தி செய்யும் நிறுவனம் முன்வந்துள்ளது.

'எம். ஐ. 35' ரக ஹெலிகள் ஏவுகணை எதிர்ப்பு ஏவுகணை வசதிகொண்டவை ஆகும். (ஐ 10)

## தமது...

(முதலாம் பக்கத் தொடர்)

னுக்கு 53 டொலர் அறவிடப்படுகின்றது. ஆனால் கொழும்பு—காங்கேசன்துறை தூரத்தை விட இரட்டிப்புத் தூரமுடைய சென்னை — கொழும்பு மார்க்கத்தில் கப்பல் கட்டணம் ஒரு மெற்றிக்தொன்னுக்கு ஆக 17 டொலர்கள் மட்டுமே.

கொழும்பு — காங்கேசன் இடையே தற்போது நடைபெறும் சேவையும் திருப்தி தருவதாக இல்லை.

★ இந்த வர்த்தக சேவைக்காக இரு இலங்கைத் தமிழர்கள் கொண்டு வந்துள்ள இரு கப்பல்களைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு அரசு அனுமதிக்காதது ஏன் என்பது குறித்து சங்கத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

அதில் ஒருவர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடமிருந்தே 'ஓஷன் சக்ஸஸ்' என்ற சரக்குக் கப்பலை வாடகைக்கு அமர்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

— இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


எமது வீடியோ
CD வெளியீடு!
கார்த்திக், கௌசல்யா,
அப்பாஸ் நடித்த
'K. பாலச்சந்தரின்'
◎ பூவேலி
(பிரமிட் CD)
ஓடியோ CD வெளியீடுகள்!
◎ மன்னவரு
சின்னவரு
◎ கல்கத்தா
புதிய படப் போஸ்டர்கள் விற்பனைக்குண்டு.
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/6013)


# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இனவாதிகளை தண்டிக்க வேண்டும்

## பௌத்த தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 5

இனவாதக் கருத்துக்களையும் இனவாத நோக்கங்களையும் கொண்டு செயற்படுபவர்களையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து தண்டிப்பதன் மூலமே இந்தநாட்டில் இனவாதத்தை முற்றாக ஒழிக்க முடியும்.

அம்பாறை மாவட்ட புத்தசாசன பாதுகாப்பு அமைப்பின் செயலாளர் ஹெட்டி முல்லராகுலதேரோஇவ்வாறு தெரிவித்துள்ளார். தீகவாபி சம்பந்தமாக மீண்டும் சர்ச்சை உருவாக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்தநாட்டில் ஏற்பட்டுள்ள இனப்படுகொலைகளுக்குசகல அரசியல் கட்சிகளின் இனவாதப் போக்கே காரணம். எந்த அரசியற் கட்சியாயினும் அதிகாரத்தைக் கைப்பற்ற கடந்த 50 வருட காலமாகப் பயன்படுத்திய ஆயுதம் இனவாதமே. இந்த இனவாதச் சிந்தனைகளை கடந்த கால அரசியல் தலைவர்கள் விதைத்ததன் காரணமாகவே தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதிகளாகியுள்ளனர்.

இலங்கை வாழ் மூவின மக்களில் ஒரு சிறுவீதத்தினர் மட்டுமே இன்று இனவாதப் போக்கைக் கொண்டவர்களாக உள்ளனர். அவர்களை தண்டிப்பதன் மூலமும் இனவாத சிந்தனைகளைமுற்றாக ஒழிக்க முடியும்.

அண்மையில் அம்பாறை நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர்கள் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்களை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

வடக்கு—கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதையும் அதிலும் அம்பாறை, புத்தளம் ஆகிய மாவட்டங்கள் முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டங்கள் என்பதையும் பௌத்தர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சிறு கட்டெறும்பைக் கூட கொல்ல அனுமதிக்காத பௌத்த மதம் கொண்ட இந்த நாட்டில் இனப்படுகொலைகள் தொடர்வது மிகவும் வேதனைக்குரியது— என்று தெரிவித்துள்ளார். (ஐ-10)

## நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 5

புதிதாக இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்வாங்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை கொழும்பு இசுறுபாயாவில் வைத்து கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான நேற்று வழங்கினார்.

நேற்றைய தினத்திலிருந்தே இவர்களது நியமனம் நடைமுறைக்கு வருகின்றது.

எதிர்வரும் 24 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி 19 ஆம் திகதி வரை இவர்களுக்கு கொழும்பில் விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

# தாயிடம் பராமரிப்பு பணம் கோரி மகன்மார் மனு!

யாழ்ப்பாணம், ஜன. 5

தமது தாயாரிடமிருந்து பராமரிப்பு பணம் பெற்றுத் தருமாறு கோரி இரு சகோதரிகள் நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

திருநெல்வேலி வளாக வீதியைச் சேர்ந்த செல்வதி செல்லையா, அசோதா செல்லையா ஆகிய இருவரும் பொன்னம்பலம் ஒழுங்கை, மானிப்பாயைச் சேர்ந்த தமது தாயாரான திருமதி செல்லையா சரஸ்வதி என்பவரிடமிருந்தே பராமரிப்புப் பணம் பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர்.

இவர்கள் தமது மனுவில் தெரிவித்துள்ளதாவது:

நாங்கள் இருவரும் தொழிலற்றவர்கள், வருமானமில்லாதவர்கள். எங்களைப் பராமரிக்க வகையற்றவர்கள். எமது தாயார் ஓய்வூதியம் பெறுபவர். இவரது மாதாந்த வருமானம் 14 ஆயிரம் ரூபாவாகும்.

1998 ஆனி மாதம் தொடக்கம் எங்களைப் பராமரிக்கத் தவறிவிட்டார். அத்துடன் எங்கள் இருவரையும் வீட்டிலிருந்து துரத்தியும் விட்டார் என்று தெரிவித்துள்ளனர்.

இலங்கை பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மாதாந்தம் 8 ஆயிரம் ரூபா பராமரிப்புப் பணமாக பெற்றுத் தருமாறு கோரி இவர்கள் தமது சட்டத்தரணி ஊடாக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவை ஏற்றுக்கொண்ட மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிவான் மு. சபாநாதன் இவ்வழக்கை இம்மாதம் 26 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (ஐ-5)

## வவுனியாவில் அடைமழை

# 9 ஆயிரத்து 842 பேர் பாடசாலைகளில் தஞ்சம்

வவுனியா, ஜன. 5

பலத்த மழையினால் வவுனியாவில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக 2 ஆயிரத்து 221 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 842 பேர் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

இவர்கள் வெளிக்குளம் அரசினர் பாடசாலையிலும் பூந்தோட்டம் அரசினர் பாடசாலையிலும் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

வவுனிக்குளத்தில் பாலாவி ஆறு பெருக்கெடுத்து வீதியை மூடி மூன்று அடி உயரத்திற்கு தண்ணீர் பாய்வதாகவும்—

இதனால் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்துஉயிலங்குளம் பகுதிக்கு வரும் மக்கள் குறிப்பிட்ட தூரம் படகுகள் மூலம் பயணம் செய்தே உயிலங்குளம் வந்து சேர்வதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## கேகாலை தேசியபாசறையில்

# சென்ஜோன்ஸ்அம்புலன்ஸ் யாழ். அணி சாதனை!

கொழும்பு, ஜன. 5

கேகாலையில் கடந்த 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெற்ற சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய பாசறையில் யாழ்ப்பாண சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைக்குழு சிறந்த மாவட்ட அணியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது.

சென். ஜோன்ஸ் மாவட்ட உதவி ஆணையாளர்களான க. அருந்தவராசா, எஸ். செல்வரஞ்சன் ஆகியோர் தலைமையில் இருபத்தியொரு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அதிகாரிகளும் பாடசாலைகளின்அம்புலன்ஸ் தொண்டர்களும் இந்தத் தேசிய பாசறையில் பங்குபற்றினர்.

மாவட்ட ரீதியில் பின்வரும் நிகழ்ச்சிகளிலும் யாழ். மாவட்ட அணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது:-

- ★ சிறந்த பாசறைப் பொருள்கள்.
- ★ முதலுதவி செய்முறைப் போட்டி.
- ★ சிறந்த கூடாரம்.
- ★ அசையும் சிகரம்.
- ★ காட்சிக்கான அழகுமிகு சிகரம்.

சென் ஜோன்ஸ் மாவட்ட உதவி ஆணையாளர் க. அருந்தவராசா வெளியிட்ட செய்திக் குறிப்பில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஐ-உ)

# கிழக்கு பல்கலை மாணவர் பகிஷ்கரிப்பு நிறுத்தம்

கொழும்பு, ஜன. 5

கிழக்கு பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்கள் நேற்று மேற்கொள்ள இருந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கையை கைவிட்டு விரிவுரைகளுக்கு சமுகமளித்தனர்.

'ராக்கிங்' சித்திரவதைக்கு உள்ளான கதிரேசர்பிள்ளை விருத்தாசலத்தின் உடல் நிலை தேறி அவர் விரிவுரைகளுக்கு சமுகமளிக்கும்வரை தாங்களும் வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பதென மாணவர்கள் தீர்மானித்திருந்தனர்.

எனினும் இந்த 'ராக்கிங்' சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள மூன்று பேர் கொண்ட குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்ததும் இந்தச் சம்பவம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும் என்று பல்கலைக்கழக உபவேந்தர் யுவி தங்கராசா உறுதிமொழியளித்ததை அடுத்து மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பு நடவடிக்கையைக் கைவிட்டு வகுப்பறைகளுக்குத் திரும்பினர்.

இதேவேளை —

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் கிகிச்சை பெற்று வந்த பிரஸ்தாப மாணவன் அவரது உறவினர்களின் கோரிக்கையின் பேரில் மருத்துவ பரிசோதனையின் பொருட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ6-'21)

## வன்னி...

[முதலாம் பக்கத் தொடர்]

விரண்டு தடவைகள் மேடையேற்ற மாணவர் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

வன்னி மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மற்றும் பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் ஆகியனவும் நிதி சேகரிப்பு முயற்சியில் ஈடுபட்டுக் கணிசமான தொகையைக் 'ஹியூடெக்' நிறுவனம் ஊடாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மட்டு...

[முதலாம் பக்கத் தொடர்]

மாக அம்பாறை மாவட்டத்தில் 500க்கு மேற்பட்ட குடும்பங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களும் இடம் பெயர்ந்துள்ளன.

இதேவேளை அம்பாறை இங்கினியாகலை குளத்தின் நீர் மட்டம் 88 அடிக்கு உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-21)

## பங்கர்...

(முதலாம் பக்கத் தொடர்)

துக்குக் கீழான காவலரண்களிலும் பதுங்கு குழிகளிலும் நீர் நிறைந்து காணப்படுவதனால் முன்னரங்க நிலைகளில் படையினர் நிலை கொண்டு நிற்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-164-6)


இடம் பெயர்ந்த வன்னி மாணவர்களின்
கல்வி வளர்ச்சி நிதிக்காக
யாழ். பல்கலைக்கழக மாணவர்
ஒன்றியத்தின் அனுசரணையுடன்
'இந்திரப் பிரஸ்தம்'
(நாடகம்)
◎ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
09 — 01 — 99 சனிக்கிழமை முற்பகல் 10. 00 மணி
பிற்பகல் 3. 00 மணி
◎ யாழ். பல்கலைக் கழகம்
10—01—99 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. 00 மணி
பிற்பகல் 3. 00 மணி
அன்பளிப்பு: 500/- 100/- 50/-
யாழ். பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம்.
(61932)


## நாலரை...

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. (ஐ-6)

## ஐந்நூறு...

(முதலாம் பக்கத் தொடர்)

கொழும்பிலிருந்து வரும் வழியில் திருகோணமலைக்குச்சென்று பயணிகளையும் ஏற்றிக்கொண்டு அடுத்த வாரம் இங்கு வரும் இக்கப்பல் இங்கே பொருள்களை இறக்கி முடித்தவுடன் காங்கேசன்துறையிலிருந்து மீண்டும் திருகோணமலைக்கு [illegible] செல்லும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## வீதியில் சென்றவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தவராவார்.

இவரது முகத்தில் சூட்டுக்காயம் காணப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 2. 30 மணியளவில் கோப்பாய் இராசபாதை வீதியில் தனது நண்பர் ஒருவருடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இவரை அவ்வீதியின் மருங்கேயுள்ள பற்றைக்குள் இருந்து திடீரெனத் துப்பாக்கியுடன் வெளிப்பட்ட சிலர் வழிமறித்தனர் என்றும்—

இவரது நண்பரை அவ்விடத்தை விட்டுப் போகுமாறு கூறிவிட்டு இவரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுவிட்டு அவ்விடத்தை விட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் — கூறப்படுகிறது.

காயமடைந்தவரை அவ்விடத்தில் இருந்து மீட்ட உறவினர்கள் அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். (ஐ-5-15-173-139)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-01-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org